சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

321. சொல்லின் வெற்றி

வாலி குத்திக் குமைக்கச் சுக்கிரீவன் உலைந்து உருக் குலைந்து போன வரலாற்றைச் சற்று விரிவாகக் கூறி வந்த அனுமன், 'உடல் கடைந்தனன், இவன் உலைந்தனன்' என்று அந்த ஹிம்சையைச் சுருங்கக் கூறி விளங்கக் காட்டினான். 'அப்படி ஹிம்ஸிக்கப் பட்டவன் இவன்; நீ உன்னுடைய இன்னுயிர்த் துணைவன் என்று அங்கீகரித்திருக்கும் இவன் தான்' என்று சுக்கிரீவனைச் சுட்டிக் காட்டினான் ராமனுக்கு.

'உன் அருளே அரண்'

'இவன் உலைந்தனன்' என்று தன் அரசனைச் சுட்டிக் காட்டும் அனுமன் வாக்கிலே, 'எப்படி உலைந்து போயிருக்கிறது பார் உன் தோழனுடைய அருமையான மேனி!' என்ற குறிப்பும் தொனிக்கிறது.

பிறகு, வாலியிடத்திலிருந்து சுக்கிரீவன் தப்பியோட முயன்றதையும், வாலி துரத்திப் பிடித்துத் தம்பியைத் தூக்கித் தரையில் அடித்து விட எத்தனித்ததையும், அந்தக் கொடிய கோபக்காரனை எப்படியோ கொஞ்சம் ஏமாந்த சமயம் பார்த்து ஏமாற்றி விட்டுச் சுக்கிரீவன் 'செத்தேனோ, பிழைத்தேனோ?' என்று ஓடி வந்து இந்த ஒளிப்பிடத்தில் பதுங்கியிருப்பதையும், ஒளிவு மறைவில்லாமல் பேசினான் அனுமன்.

'இங்கே வந்தால் வாலி இறப்பான் என்று மதங்க முனிவர் சாபம். அதனால் தான் வாலி இங்கே வரவில்லை. இல்லாவிட்டால் இங்கும் வந்து இவனைக் கொன்றொழித்திருப்பான். எனினும் வாலி கோபத்திலிருந்து பாது காக்க எதுதான் அரணாகும்? வாலி பல்லைக் கடித்தால் எமனுக்குத்தான் எங்கே அரண் கிடைக்கப் போகிறது?' என்றெல்லாம் சொன்னான்.

ஆகவே, இந்த மலையை உண்மையில் ஓர் அரணாகக் கருதவில்லை. முனிவர் சாபத்தையோ, கோபத்தையோ இனி ஓர் அரணாக நம்பியிருக்கவும் இயலாது என்றே கருதுகிறான் அனுமன்.



எந்தை! மற்(று)
அவன்
எயி(று)அ
துக்குமேல்,
அந்த
கூற்றம்ஓர்
அரணும்
இல்லையால்!

[எந்தை — எமக்குத் தந்தையும் தெய்வமும் போன்ற ராமனே. எயிறு — பல். அதுக்குமேல் — அதுக்கு வானானால்; கடிப்பானானால். அந்தகற்கும் — யமனுக்கும்.]

என்று சொல்லும் அனுமன், 'கருணை வள்ளலே! இனி உன் அருளே அரண்' என்று சொல்லாமல் சொல்லி விடுகிறான்.

சிகர வார்த்தை

அனுமனுடைய பேச்சு இங்கே சிகரத்தை எட்டிவிட்டதாகவே தோன்றுகிறது — இல்லையா? ஆனால் இறுதி — வார்த்தை இனிமேல் தான் வருகிறது. இதோ இது தான் சிகரம்:

'உரிமை என்(று)இவற்(கு)
உரிய தாரமாம்
அரும ருந்தையும்
அவன்வி ரும்பினான்;
இருமை யும்துறந்(து)
இவன்இ ருந்தனன்;
கருமம் இங்கிதே,
கடவுள்!' என்றனன்.

[இவற்கு - இவனுக்கு. அருமருந்து - கிடைத்தற்கரிய தேவாமிர்தம். இருமை - (அரசு, மனைவி என்ற) இரண்டு.]

ராம கோபம்

'இதுதான் கருமம், கடவுளே!' என்று சொல்லின் செல்வன் சொல்லி முடித்ததும், கோபம் வந்து துடிக்கிறது வில்லின் செல்வனுக்குக் கண்ணிலும் உதட்டிலும்:

பொய்யி லாதவன்
வரன்முறை இம்மொழி
புகல,
ஐயன், ஆயிரம்
பெயருடை அமலர்க்கும்
அமலன்
வையம் நுங்கிய
வாயிதழ் துடித்தது;
மலர்க்கண் —
செய்ய தாமரை,
ஆம்பலம் போதெனச்
சிவந்த!

[பொய்யிலாதவன் - (இங்கே) அனுமன். வரன்முறை - வரலாறு. இம்மொழி புகல - இந்தச் சிகர வார்த்தையால் சொல்லி முடிக்க. அமலர்க்கும் அமலன் - குற்றமில்லாதவர்களிலும் குற்றமில்லாதவன். வையம் நுங்கிய வாய் இதழ் - உலகம் உண்ட அந்த வாயின் உதடு. மலர்க்கண் செய்ய தாமரை - கண்களாகிய செந்தாமரை மலர்கள். ஆம்பலம்போது - செவ்வாம்பல் மலர்.]

மனைவியைப் பிரிந்து தவித்துக் கொண்டிருக்கும் ராமனிடம் 'சொல்லின் செல்வன்' சிகரமாக வைத்துச் சொன்ன சொல், வாலிமீது ராம கோபத்தை எப்படி மூட்டி விடுகிறது, பாருங்கள்!

ராமன் தனக்கு உரிமையான ராஜ்யத்தையே தம்பிக்குக் கொடுத்தவன். வாலியோ தன் தம்பிக்கு உரிய தாரத்தையும் அபகரித்துக்கொண்டான். இதைச் செவியுற்றதும் ராமனுக்கு வந்த கடுங்கோபத்தைச் சொல்ல வந்த கவிஞன், 'அந்த நாளிலே கைகேயி ஈரமில்லாத நெஞ்சுடன், தன் மகனுக்கு ராமன் ராஜ்யம் கொடுத்த அந்தக் கொடைக்குக் கைம்மாறாக அந்தக் கருணை வள்ளலையே காட்டுக்கும் போகச் சொன்னாளே!' என்ற அந்தக் கதையையும் நினைத்துப் பார்க்கிறான்:





ஈரம் நீங்கிய
சிற்றவை சொற்றனள்
என்ன,
ஆரம் விங்குதோள்-
தம்பிக்குத் தன்னர-
சுரிமைப்
பாரம் ஈந்தவன்,
பரிவிலன் ஒருவன்தன்
இளையோன்
தாரம் வவ்வினன்
என்றசொல் தரிக்குமா(று)
உளதோ ?

[சிற்றவை – சிறிய தாய். சொற்றனள் என்ன – சொன்னாள் என்று. வீங்கு தோள் – பருத்த தோள். தன் அரசுரிமைப் பாரம் – தனக்கே உரிய ராஜ்யபாரம். பரிவிலன் ஒருவன் – இரக்கமில்லாதவன் ஒருவன்; (இங்கே) வாலி. வவ்வினன் – அபகரித்தான். தரிக்குமாறு – பொறுத்துச் சும்மா இருப்பது.]

கோபம் தர்மாவேசமாகிறது

பொறுமைக்குப் பூஷணமான ராமனும் பொறுமை இழக்குமாறு தன் பேச்சை முடித்தான் சொல்லின் செல்வன். உடனே சுக்ரீவனை நோக்கி, 'வாலியுள்ள இடத்தை இப்போதே காட்டு; வாலிக்கு உதவியாக யார் வந்து தடுத்தாலும், நான் இந்த வில்லிலிருந்து விடுகின்ற அம்பினால் வாலியைக் கொன்று விடுவேன்' என்று உறுதி கூறுகிறான் வில்லின் செல்வன்.

இதற்கு அனுமன் தூண்டிய கோபம் தானு காரணம்?

அனுமன் தன்னை அறியாமலே ராம னுடைய தர்மாவேசத்தையும் தூண்டி விடுகிறான். துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரி பாலனத்திற்காக அவதரித்திருக்கிறு னல்லவா? அந்த அவதாரப் பெருநோக் கம் ராமனுடைய தர்மாவேசத்திலே மறைந்து ஒளிரவதையும் கவிஞன் நினைப் பூட்டுகிறான்:

திறந்து மாமறை
அயனொ(டு)ஐம் முகன்பிறர்
தேடிப்
புறந்(து) அகத்(து)உணர்
அரியதன் பொலனடிக்
கமலம்
உறச்சி வப்பஇத்
தரைமிசை யுறல்,அறம்
ஆக்கல்
மறத்தை வீட்டுதல்
அன்றியே பிறிதுமற்(று)
உண்டோ?

[திறத்து மாமறை — கூறுபாடுக ளோடு கூடிய சிறந்த வேதங்கள். அயன் — பிரம்ம தேவன். ஐம்முகன் — சிவன். பிறர் — மற்றத் தேவர்கள். புறத்து — வெளியிலும். அகத்து — உள்ளத்திலும். உணர் அரிய — உணர் வதற்கு அரிய. பொலன் அடிக்கமலம் — அழகிய திருவடித் தாமரைகள். உறச் சிவப்ப — மிகவும் சிவக்கும்படி. தரை மிசை உறல் — பூமியிலே பொருந்துதல்; (இங்கே) தரையிலே பொருந்துவதற் குக் காரணம். அறம் ஆக்கல் — தரு மத்தைக் காத்து வளர்த்தல். மறத்தை வீட்டுதல் — அதர்மத்தை அழித்தல். பிறிது — வேறொன்று.]

ராவணனும் வாலியும்

அவதார நோக்கம் நிறைவேறு வதற்கு ராவண வதம் போல் வாலிவத மும் அவசியம் என்பது கவிஞன் குறிப்பு. வாலி இப்போது ராவண னுடன் நட்புக்கொண்டும் இருக்கிறான். ஆகவே ராவண வதத்திற்கு வாலிவதம் இன்றியமையாதது என்றே கருதலாம்.

ஒரு சமயம் ராவணன் வாலியைக் கட்டிப் பிடித்து வலியடக்கி வெற்றிக் குடையை நன்றாகப் பிடித்துக்கொண்டு எங்கும் செல்லலாமென்று தீர்மானித் தானும். ஆனால் மாயாவியைப்போல் முட்டாள் தனமாய் வந்து முட்டிக் கொள்ளவில்லை. பத்துத் தலை — மூளை யாலும் ஆலோசித்துப் பார்த்து, எதிரே சென்றால் தன்னுடைய அருமையான பலத்தில் பாதி வாலிக்குப் போய்விடும் என்பதை நன்றாக அறிந்திருந்தான் ராவணன். ஆகவே வாலியைக் கட்டிப் பிடித்துக் கொள்வதற்குப் பின்புறமா கவே வந்துசேர்ந்தான். அது வாலிக்குந் தெரிந்துவிட்டது. இல்லை, வாலுக் குத் தெரிந்து விட்டது. உடனே வால் நீண்டு ராவணனைக் கட்டி வலியடக்கிக் கர்வ பங்கம் செய்துவிட்டதாம்.

அது ஒரு காலம்; இப்போது ராவண னுக்கு நண்பனுயிருக்கும் இது ஒரு காலம் என்பது அனுமன் குறிப்பு.

'அந்த நாளில் ராவணன் மதி இல் லாமல்தான் வாலி வாலில் வந்து மாட் டிக் கொண்டான். பிறகு புத்திசாலித் தனமாக வாலியை நண்பனுக்கிக் கொண்டான்' என்று கருதுகிறான் அனுமன்.

இப்போது, ராவண வதத்திற்கு முன்பே வாலிவதத்தை முடிப்பது அவ சியம் என்ற உணர்ச்சியை ராமனுக்கு உண்டாக்கித் தன் பேச்சை முடித்துக் கொள்கிறான் அனுமன். ராமனுக்குக் கோபம் பிறந்து அது தர்மாவேசமாகி விட்டதும் அனுமனுக்குத்தான் எவ்வ ளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும்!

இப்படி யிருக்க, சுக்கிரீவனுடைய மகிழ்ச்சியைச் சொல்லவாவேண்டும்? எனினும் 'இதோ புறப்படுவோம்' என்று புறப்படாமல், 'தனியே யிருந்து நாங்கள் ஆலோசனை செய்ய விரும்பு கிறோம்' என்று ராமனிடம் தெரிவித் துக் கொள்கிறானே சுக்கிரீவன் — அது என்ன ஆலோசனை? அடுத்த வாரம் பார்க்கலாமே.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

322. மரங்கள் சொன்ன சாட்சி

'நாங்கள் சிறிது ஆலோசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது' என்று சுக்கிரீவன் கொஞ்சம் அசட்டுச் சிரிப்புடன் சொல்லிவிட்டு வெளியே போனான். அந்தச் சிரிப்பும் அந்த ஆலோசனையும் பளிச்சென்று புரிந்து விட்டன அனுமனுக்கும் ராமனுக்கும்.

அனுமன் புத்தி

அமைச்சர்கள் சூழச் சுக்கிரீவன் ஒரு தனியிடத்தில் இருந்து மந்திராலோசனை செய்ய விரும்பினான். 'இதற்கு ஆலோசனையும் வேண்டுமா? விசேஷ நினைவும் கல்வியும் நீதிப் பேச்சும் சூழ்ச்சித்திறனும் வேண்டுமா?' என்று கருதிய அனுமன் தன்னுடைய அபார வித்தையிலிருந்தும் நியாய புத்தியிலிருந்தும் ஆலோசனைத் திறமையிலிருந்தும் அள்ளிக்கொடுப்பதுபோல் ஓர் உரை நிகழ்த்தி விரைவில் சுக்கிரீவனைத் தெளிவு பெறச் செய்து விட்டான்.



'வாலியைக் கொல்லும் சக்தி இந்த ராஜகுமாரனுக்கு உண்டா, இல்லையா?' என்ற சந்தேகம் தான் சுக்கிரீவனுக்கு வந்து விட்டது. ராமனைக் கண்டதும் 'புருஷோத்தமன்' என்று சிறப்பாகக் கருதியவன் தான். எனினும் தெளிந்த அறிவு சுக்கிரீவனுக்கு இன்னும் ஏற்படவில்லை. அனுமனைப் போல் செம்மையாக உள்ளுருகி நெஞ்சிலே மெய்ம்மை கண்டவனல்ல.

இந்த நிலையில் தெளிவு கண்டவன் தெளிவு பெறாதவனை நோக்கி, 'ராமனுடைய சக்தியைக் குறித்து ஒரு சந்தேகமும் வேண்டாம். என் தந்தையாகிய வாயு பகவான் முன்பு என்னை நோக்கிப் புருஷோத்தமனுக்குப் பணி செய்ய வேண்டுமென்று புத்தி சொன்னதுண்டு. அந்தப் புருஷோத்தமனே ராமன் என்பதாக நான் தெளிவாய்த் தெரிந்துகொண்டிருக்கிறேன்' என்று சொன்னான்.

நோயுடன் தோன்றும் மருந்து

தன் தந்தையிடம் 'புருஷோத்தமனை நான் அறிந்து கொள்வதற்கு உபாயம் என்ன?' என்று அனுமன் கேட்டான். அதற்கு வாயுதேவன் பதில் சொன்னானாம்:

துன்பு தோன்றிய
  பொழு(து), உடன்
தோன்றுவன்
  எவர்க்கும்

[துன்பு - துன்பம்.]

துன்பம் தோன்றிய பொழுதே அதனுடன்

தோன்றுகிறானும் துன்பம் நீக்கும் மருத்துவனும். ஜாதி, மதம், நிறம் முதலான எந்த வேற்றுமையும் பாராது எவர்க்கும் தோன்றுகிறானும்.

நாஸ்திகனுக்கும் எதிரில் வந்து நிற்கத்தான் செய்கிறான், துன்பம் தீர்ப்பதற்கு. ஆனால் காணக் கண் வேண்டுமே!—ஞானக் கண் வேண்டும், பக்திக் கண் வேண்டும், பரமவிசுவாசப் பார்வை வேண்டும். ஊனக் கண்ணுக்கு ஞான மூர்த்தி இலக்கானால்தான் பயன் என்ன? ஞானக் கண் இல்லாதவர் நம்புவாரா? நம்ப முடியுமா? 'ஏதோ மாயத் தோற்றம், உருவெளித் தோற்றம், கண்ணை ஏமாற்றி விட்டது!' என்று தானே சொல்லக்கூடும்? 'ஏதோ அஞ்ஞானம்!' என்றுதான் விஞ்ஞானமும் சொல்லும். தக்க சான்று வேண்டும் என்பார்களே?

அனுமனுக்கு கிடைத்த சாட்சி

ஆம்; அனுமனும் பிள்ளைப் பிராயத்திலே தந்தையிடம்,—'துன்பு தோன்றியபொழுது உடன் தோன்றுவன்' என்று சொன்ன தந்தையிடம்,—'நான் என் கண்ணைத்தான் நம்பிவிட முடியுமா? தக்க சான்று வேண்டாமா புருஷோத்தமனை இனம் கண்டு கொள்வதற்கு?' என்று கேட்டான்.

'கண்ணே! காதே நமஸ்காரம்; கண்டதைக் கேட்டதை நம்பாதே' என்ற நிலையில்தான் அனுமனும் இருந்தான்.



தன் கேள்விக்குத் தந்தை சொன்னதை இப்போது சுக்கிரீவனிடம் சொல்லி அந்தச் சான்று சரியாகப் பலித்துவிட்டது என்கிறான்:

அன்பு சான்றென
  உரைத்தனன், ஐய! என்
    யாக்கை
என்பு தோன்றல
  உருகின(து) எனின், பிறி(து)
    எவனோ?

[யாக்கை — உடம்பு. என்பு தோன்றல உருகினது — எலும்பு என்று ஒன்று இருப்பதே தெரியாதபடி உருகிவிட்டது. எனின் — என்றால். பிறிது எவனோ — வேறு விதமாய்ச் சந்தேகிப்பது எப்படியோ?]

'புருஷோத்தமனைக் கண்டதும் அறிந்து கொள்ள உபாயம் என்ன' என்ற கேள்விக்கு, 'அபாயம் தோன்றியபொழுதே அவன் தோன்றுவான். அவனைக் கண்டதும் உன்னிடம் அன்பு தோன்றும். அது சான்று. அந்த அன்பு பணியாகக் கனிய வேண்டும்' என்று விடை தந்தானும் அனுமன் தந்தை. என்ன அழகான கொள்கை!

சுக்கிரீவனுக்கு வேறு சாட்சி

இந்த உண்மையைச் சுக்கிரீவனால் அப்படியே உணர்ந்துகொள்ள முடியாதென்று அனுமன் ராமனுடைய போற்றலுக்கு ஒரு ஸ்தூலமான சாட்சியும் காட்ட விரும்புகிறான். ஒன்றல்ல, ஏழு ஸ்தூலமான சாட்சிகள்! வழியிலுள்ள ஏழு மாமரங்களைத்தான் அனுமன் குறிப்பிடுகிறான்.


அந்த ஏழு மாமரங்களையும் ராமனுடைய ஒரே அம்பு ஊடுருவிச் செல்ல வல்லது என்பதைச் சுக்கிரீவன் பார்த்துவிட்டால், வாலியின் வயிரம்பாய்ந்த மார்பிலும் ராமபாணம் பாய்ந்து விடும் என்பதை ஊகிக்கக் கூடுமல்லவா?

அன்பு அல்ல, அம்பு!

சுக்கிரீவன் ராமனிடம் சென்று 'நான் உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது' என்று சொல்லித் தயங்கி நிற்க, ராமன் 'சும்மா சொல்லு' என்று தைரியப்படுத்துகிறான், தனக்குக் கிடைத்த புதிய தம்பியை. வழியிலுள்ள மாமரங்கள் ' ஏழையும் ஊடுருவிப் போகும் அம்பு என் மனத்துன்பத்தையும் துளைத்துத் தள்ளிவிடும்' என்று வானரத் தம்பி கள்ளங் கவடில்லாமல் சொல்ல, புருஷோத்தம அண்ணனும் புன்சிரிப்புக் கொள்கிறான்.

ஏன்? 'அன்பு சான்று' என்று நம்பினான் அனுமன். 'அம்பு சான்று' என்கிறான் சுக்கிரீவன். எனினும் உட்கருத்தை ஒளியாது வெளியிடுகிறானல்லவா?

ராமன் தன் கோதண்டத்தை நாணேற்றிக் கொண்டே மாமரங்களை நெருங்குகிறான். அந்த மலைக் காட்டிலுள்ள ராட்சஸ மரங்கள் அவை. உள்ளே வயிரம் பாய்ந்து பயங்கரமாக (வாலி போல்) வளர்ந்திருப்பவை.



ஆய மாமரம்
அனைத்தையும்
நோக்கிநின்(று),
அமலன்
தூய வார்கணை
துரப்பதோர் ஆதரம்
தோன்றச்,
சேய வானமும்
திசைகளும் செவிடுறத்
தேவர்க்(கு)
ஏய்வி லாததோர்
பயம்வரச்,
சிலையின்நாண்
எறிந்தான்.

[ஆய - அந்தத் தன்மையுள்ள. மாமரம்-(இங்கே) பெரிய மாமரங்கள். அமலன் - குற்றமற்ற ராமன். தூய வார்கணை - பரிசுத்தமான நீண்ட பாணம். துரப்பது ஓர் ஆதரம் - பிரயோகிப்பதற்கு ஏற்ற ஒரு விருப்பம். சேய - தூரத்திலுள்ள. செவிடுற - செவிடுபட. ஏய்வு இலாததோர் - பொருந்துவது அல்லாததொரு; (இது வரை) உண்டாகாததொரு. சிலை-வில்.]

ராமன் கைவிரலால் நாண் எறிந்து டங்காரத் தொனி செய்ததும் என்ன நடந்தது என்பதைச் சொல்லத் தொடங்கினால், சுக்கிரீவன் முதலிய பலருக்கும் பழியாக முடியும் என்கிறான் கவிஞன். அப்படி நடுங்கிக் 'குர்குர்' என்று அந்த வானர வீரர்கள் கூச்சலிட்டிருப்பர் என்றோ, திகைத்துத் திக்பிரமை அடைந்திருப்பர் என்றோ நம்மை ஊகிக்க விட்டு விட்டுக் கவிஞன் ராம

பாணம் பிரயோகமானதை வருணிக்கத் தொடங்குகிறான்.

ஏழின் ஏழைமை!

அப்போது சத்திய வாக்குள்ள அனுமன் முதலிய சில தைரியசாலிகள் மட்டும், 'நாணொலியே இப்படி யென்றால் அம்பு போடும் அதிசயத்தையும் பார்த்து விடுவோம்' என்று அருமையாகத் தங்களைத் தேற்றிக் கொண்டு ராமனை அணுகி நிற்கிறார்களாம்.

ராமன் நாணை இழுத்து அம்பு எய்ததும் அந்த ராமபாணம் ஏழு மராமரங்களையும் துளைத்து ஊடுருவிச் சென்றதோடு, ஏழு ஏழாகவுள்ள பொருள்களையெல்லாம் நடுங்கச் செய்து விட்டதாம். ஏழு என்ற எண்ணுக்கே ஆபத்து, ஏழே பாழ்! — என்று அஞ்சும்படி!

ஏழும் சாட்சிகள்!

சுக்கிரீவனோ அச்சம் நீங்கி ராமனைத் துதிக்கிறான்:

'என்னனக்(கு) அரிய(து), எப்
பொருளும்எற்(கு)எளிதலால்?
உன்னை இத் தலைவிடுத்(து)
உதவினார் விதியினார்!
அன்னைஒப் புடையஉன்
அடியருக்(கு) அடியன்யான்,
மன்னவர்க்(கு) அரச!' என்(று)
உரைசெய்தான் வசையிலான்.

[என்-என்ன. எற்கு-எனக்கு. இத்தலை - இவ்விடத்தில். வசை யிலான் - (இங்கே) கள்ளங் கவடு இல்லாதவன்.]

அன்பு சான்றாக அனுமன் அறிந்து கொண்ட உண்மையை அம்பும் சான்றாகக் காட்டவே, சுக்கிரீவனும் தெரிந்து கொண்டு, 'அடியேன் உன் அடியாருக்கு அடியன்' என்று ராம கைங்கரியத்திற்குச் சித்தமாகிறான்.

ஆனால் வானரவீரர்கள் இப்போது செய்யும் கைங்கரிய மெல்லாம் வேறு எதுவும் இல்லை;

ஆடினார், பாடினார்;
அங்கும்இங் கும்கலந்(து)
ஓடினார், உவகையின்
நறவைஉண்(டு) உணர்கிலார்;
'நேடினும் வாலிகா-
லனை'என, நெடிதுநாள்
வாடினார் தோளெலாம்
வளர,மற் றவரெலாம்.

[உவகையின் நறவு - மகிழ்ச்சியாகிய மது. உணர்கிலார்-தம்மை மறந்தவர்களாய். நேடினும்-தேடினோம்; (இங்கே) தேடிக்கண்டு கொண்டோம். மற்றவர் எலாம்-மற்ற வானர வீரர்களெல்லாம்.]

ஒரு சாட்சி — தனது நம்பிக்கைக்கு ஏற்ற ஒரு சாட்சி — கேட்டவனுக்கு. எத்தனை சாட்சிகள்! பொய் சொல்லத் தெரியாத — பொய் சொல்ல முடியாத சாட்சிகளல்லவா?

இத்தகைய மகிழ்ச்சி விழாவுக்குப் பின், சுக்கிரீவன் ராமனை நோக்கி, 'இந்த இடத்தில் முன்னொரு நாள் நாங்கள் கூடியிருந்த சமயத்திலே ராவணன்...' என்று ஒரு செய்தி சொல்ல ஆரம்பிக்கிறான். 'ராவணன்' என்றதும் ராமன் எவ்வளவு கவனமாய்க் கேட்டிருக்க வேண்டும் அதை!

'அச்சமயம் ராவணனைக் கண்டோம்' என்று சொல்லும் சுக்கிரீவன், 'அந்தக் கொடியவன் ஒரு பெண்ணைக் கொண்டு போனான். அவள் துன்பத்தோடு கதறிக்கொண்டிருந்தாள்' என்கிறான். பத்துத் தலை ராவணனைத் தூரத்திலிருந்தே தெரிந்துகொண்ட சுக்கிரீவன் அப்போது அந்தப் பெண்ணை யாரென்று தெரிந்து கொள்ளவில்லை. இப்போது தான் 'ராமனுடைய தேவி தானோ?' என்று ஊகிக்கிறான்.

'அவள் நெடுந் தூரத்திலிருந்து கதறுவதைக் கேட்டது தான்' என்று சொல்லி, 'அந்த மேனி அடையாளம் கூடச் சொல்ல முடியவில்லை என்பதை உய்த்துணர விடுகிறான் சுக்கிரீவன். 'அவ்வளவு தூரத்திலிருந்து இந்தக் காடு மலைகளிலுள்ள நேர் வழியை நோக்கிக் கதறினாள்; அதில் எவ்வளவோ துன்பம் தொனித்தது!' என்கிறான்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.


323. ஆபரண முடிப்பு

அரக்கன் வசமாகிக் கதறிக் கொண்டே சென்றவளை இப்போது, 'ராமன் மனைவி தானோ?' என்ற சந்தேகத்துடனும், ஓரளவு நிச்சயமான ஊகத்துடனும், நினைத்துப் பார்க்கிறான் சுக்கிரீவன். அவள் கதறிக் கொண்டே இந்தப் பக்கமாய்ப் போனபோது நிகழ்ந்த நிகழ்ச்சியுடன் சேர்த்து நினைவில் கொணர்ந்து பார்க்கிறான்.

இப்படி நினைத்துப் பார்க்கும்போதே அந்தப் பெண்ணின் முகம்கூட நன்றாகத் தெரியாமலிருந்த நிலையில் அகத்திலே நிகழ்ந்த அந்த நிகழ்ச்சியையும்கூட ஊகஞ்செய்து பார்க்கிறான். ஆனால் இந்த ஊகத்தில் அவ்வளவு நிச்சய புத்தி ஏற்படவில்லை.

சுக்கிரீவனின் மனோபாவம்

இப்போது சுக்கிரீவன் உள்ளுக்குள்ளே சிந்திக்கவில்லை, உரக்கச் சிந்திக்கிறான், ராமன் கேட்கும்படி — நண்பனான ராமனுடன் சேர்ந்து சிந்தித்துப் பார்ப்பதுபோல. சிந்தித்துக் கொண்டே உரையாடுவதாகப் பாவித்துக்கொள்ளலாம்:



உழையரின்
 உணர்த்துவ(து)
உளதென்(று)
 உன்னியோ?—
குழைபொரு கண்ணினாள்
 குறித்த(து) ஓர்ந்திலம்;
மழைபொரு கண்ணிணை
 வாரி யோடுதன்
இழைபொதிந்(து) இட்டனள்;
 யாங்கள் ஏற்றனம்.

[உழையரின் — தூதர்கள் போல. உணர்த்துவது உளதென்று உன்னியோ — தெரிவிக்கக் கூடியது உண்டென்று நினைத்துத்தானோ. குழை — ஒருவகைக் காதணி. பொரு — மோதுகின்ற. குழைபொரு கண்ணினாள் — 'காதளவு ஓடுகின்ற கடைக்கண்!' என்று அதிசயிக்கும்படி நீண்ட கண்களையுடைய சீதை. குறித்தது — உள்ளத்திலே குறியாக, நோக்கமாகக் கொண்டது. ஓர்ந்திலம் — நாங்கள் அறிகின்றோமில்லை. மழை பொரு — மழையை ஒத்த. கண் இணை — கண்கள் இரண்டு. கண்இணை வாரி — கண்கள் இரண்டிலிருந்தும் பெருகுகின்ற நீர். இழை — ஆபரணங்கள். பொதிந்து இட்டனள் — (துணியில்) முடிந்து (கீழே) போட்டாள். யாங்கள் — நாங்கள். ஏற்றனம் — (கையில்) ஏற்றுக் கொண்டோம்.]

ஆபரண முடிப்பை ஏன் அப்படிக் கீழே போட்டாள்? தான் போகிற வழியில் தன்

அடையாளமாக அது உதவக்கூடும் என்றுதான் நினைத்திருக்க வேண்டும். இதைத்தான் சுக்கிரீவன் கவி - மனோ பாவத்துடன் 'தூதர்கள் போலத் தூது சென்று இந்த நகைகள் தன் கருத்தைத் தெரிவிக்கக்கூடும் நாயகனுக்கு!' என்று அவள் நினைத்ததாகச் சொல்லுகிறான்.

'மழை போலக் குளிர்ந்து மகிழ்ச்சி விளைக்கும் கண்கள் மழை போலக் கண்ணீர் சொரிந்தன' என்று இவன் கூறுவதும் கவி - மனோபாவம் தான். காதளவோடிய, காதோடு மோதும், கண்ணினள்' என்று சீதையைக் குறிப்பதே கவி - மனோபாவம் தான்.

சுக்கிரீவனுடைய பேச்சு இப்போது சோராமர்களின் பேரழகிலும் பெருந் துன்பத்திலும் ஒருங்கே உருகிப் பேசும் பேச்சு. 'அவள் போட்ட ஆபரண முடிப்பைத் தரையில் விழாதபடி நாங்கள் கைகளில் ஏந்திக் கொண்டோம், கை படைத்த பாக்கியமாக!' என்று எவ்வளவு பக்திக் காதலுடன் தெரிவிக்கிறான்!

'அந்த ஆபரண முடிப்பை அப்படியே பத்திரமாக வைத்திருக்கிறோம். இப்போதே, இந்த இடத்திலேயே கொண்டு வந்து காட்டுவேன். வள்ளலே! நீ பார்த்து உன் தர்மபத்தினியின் நகைகளா, இல்லையா என்று தெரிந்து கொள்வாய்' என்கிறான்.

இந்த நட்புக் காதலைக் கவிஞன், காட்டுகிறான்:

கைத்தலத்(து) அன்னவை
  கொணர்ந்து காட்டினன்,
நெய்த்தலைப் பால்கலந் -
  தனைய நேயத்தான்.

[அன்னவை — அந்த ஆபரணங்களை. நெய்த்தலை — நெய்யில். கலந்து அனைய- கலந்தாற்போன்ற. நேயம் — நேசம்.]

நெய்யோடு பால் இருப்பது போல், பாலில் நெய் அல்லது வெண்ணெய் இரண்டறக் கலந்திருப்பது போல் ராமனோடு கலந்த நேசத்திலே சுக்கிரீவன் இப்போது தன்னை இழந்து நிற்கிறான்.

முடிப்பிலிருந்த ஆபரணங்களை ராமன் பார்க்கிறான். தேவியின் திருமேனி ஆபரணங்களை அப்படிக் கண்டதும் ராமன் அடைந்த நிலைதான் என்ன? கவிஞன் தான் சொல்லவேண்டும், 'நாமோ சொல்ல வல்லோம்?' என்கிறான் கவிஞன். ஆனால் தான் கண்டும் சொல்ல முடியவில்லை என்று தானே சொல்லுகிறான்?

இதோ நம்மையும் காணச் செய்கிறான் ராமன் அடைந்த அந்த நிலையை:

தெரிவுற நோக்கினன்
  தெரிவை மெய்யணி;
எரிகனல் எய்திய
  மெழுகின், யாக்கைபோல்
உருகினன் என்கிலம்;
  உயிருக்(கு) ஊற்றமாய்ப்
பருகினன் என்கிலம்;
  பகர்வ(து) என்கொலாம்?

[தெரிவுற — நன்றாகத் தெரியும்படி. தெரிவை — பெண். (இங்கே) சீதை. மெய் அணி — மேனியின் ஆபரணங்கள். எரிகனல் எய்திய மெழுகின்—எரிகின்ற கனலை அடைந்த மெழுகுபோல. யாக்கை — உடம்பு. என்கிலம் — என்று சொல்ல முடியாமல் இருக்கிறோம். ஊற்றம் — ஆதாரம். பருகினன் என்கிலம் — பருகினான் என்று சொல்ல முடியாமலும் இருக்கிறோம். பகர்வது என்கொலாம் – சொல்வதற்கு என்ன தான் இருக்கிறது.]

ராமன் அந்த ஆபரணங்களை நன்றாகப் பார்த்த மாத்திரத்தில் அடைந்த நிலையை உள்ளபடி தெரிந்து கொள்ளலாம் இந்தப் பாட்டின் வாயிலாக. பாடிப் பாடிப் பார்த்துக் கொள்ள வேண்டியது தான்.

இன்னும் பாருங்கள், இன்னும் கேளுங்கள். 'அதோ பார்' என்று காட்டி எடுத்துரைக்கிறான் கவிஞன்:

விட்டபே ருணர்வினை
  விளித்த என்கெனோ?
அட்டன உயிரை அவ்
  அணிகள் என்கெனோ?

கொட்டின சாந்தெனக்
குளிர்ந்த என்கெனோ ?
சுட்டன என்கெனோ?
யாது சொல்லுகேன் ?

[விட்ட பேருணர்வினை - உடம்பை விட்டு வெளிப்பட்ட அந்தச் சிறந்த அறிவை. விளித்த என்கெனோ — அழைத்தன வென்று சொல்வேனோ. அட்டன — கொன்றன. சாந்து — சந்தனம். யாது சொல்லுகேன் - என்ன வென்று சொல்லுவேன்.]

இந்த இரண்டு பாடல்களையும் பாடிப் பாடிப் பார்க்கப் பார்க்க, 'அந்த அணிகலங்களை ராமன் எப்படிப் பார்த்தான்? எப்படி உருகினன் உள்ளத்திலும் உடம்பிலும்? என்ன பாடு பட்டான்? எத்தகைய நம்பிக்கை உள்ளுக்குள்ளே தளிர்க்கப் பெற்றான்? அல்லது, எத்தகைய சிந்தனையால் வெதும்பினன்? எத்தகைய சிந்தையால் எரிக்கப் பெற்றான்?' என்ற அந்த நிலமைகளை யெல்லாம் நாமும் பார்க்கிறோம்.

சோக வெறியும் குதூகல வெறியும்

ராமன் சோகப் பிராந்தனாகிறான். ஏதேதோ நம்பிக்கை கொண்டு மோகப் பிராந்தனுமாகிறான் :

மோந்திட நறுமல-
ரான, மொய்ம்பினில்
ஏந்திட உத்தரி—
யத்தை ஏய்ந்தன;
சாந்தமு மாய்ஒளி
தழுவப் போர்த்தலால்
பூந்துகி லாயஅப்
பூவை பூண்களே !

[நறுமலர் ஆன — நறு மணம் வீசும் மலர்களாயின. மொய்ம்பு - (இங்கே) தோள். உத்தரியம் — மேலாடை. ஏய்ந்தன — ஒத்தன. சாந்தம் - சந்தனம். பூந்துகில் — அழகிய ஆடை; (இங்கே மேற்போர்வை.]

ஆபரணங்கள் என்பதையே மறந்து விட்டானும். ஏன் அப்படி மூக்கில் வைத்து மோந்து பார்க்கிறான்? மலர்கள் என்றே மயங்கி விட்டானோ?



தோளில் ஏத்திப் பெருமைப் படுகிறுனே, ஏதோ விலையுயர்ந்த, வெகு அருமையான, உத்தரீயத்தை அணிந்து மகிழ்வது போல! முன்னிலும் அதிக மயக்கம். தோள்மீது உத்தரியம் ஒன்று கிடக்கிறதா, இல்லையா? — என்று அதிசயிக்கும்படி அவ்வளவு நேர்த்தியான, மென்மையான, மேன்மையான மேலாடையை அந்நாளில் அரசர்களும் பிரபுக்களும் அணிந்துகொள்ள விரும்பினவர் என்பது இந்த வருணனையில் கிடக்கும் சரித்திரப் புதையல்.

நறுமலர் போல் மோந்து பார்த்தான். உத்தரீயம் போல் உவந்து அணிந்தான். மேலும் மயக்கம் அதிகரிக்க, 'சந்தனம் தானே?' என்று பூசிக்கொண்டானும்.

இப்போது இந்த அணிமணிகளின் ஒளி ராமனைத் தழுவிப் போர்த்துக் கொள்வது போலத் தோன்றுகிறதாம். நல்லது, அழகான போர்வையும் ஆகி விட்டன ஆபரணங்கள்!

'சோக வெறியா, மகிழ்ச்சி வெறியா?' என்பது இன்னும் தெளிவு படவில்லையாம்:

> போர்த்தன மயிர்ப்புறம்
>   புளகம்; பொங்குதோள்
> வேர்த்தன என்கெனே?
>   வேதும்பி னுள்என்கோ?
> தீர்த்தனே அவ்வழி
>   யாது செப்புகேன்?

[போர்த்தன மயிர்ப்புறம் புளகம் — மயிர்ச் சிலிர்ப்புக்கள் உடம்பு முழுவதையும் மூடின. புறம்—(இங்கே) உடம்பு. பொங்கு தோள் — பூரிக்கின்ற தோள்கள். என்கோ — என்று சொல்வேனே. தீர்த்தன் — பரிசுத்த மூர்த்தியான ராமன். அவ்வழி — அப்போது ராமன் அடைந்த நிலை.]

இத்தகைய நிலையில் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும், சோகத்திற்கும் மகிழ்ச்சிக்கும் இடையே ஊஞ்சலாடிய உள்ளத்திலே தாபம் அதிகப்படுகிறது; மேன்மேலும் அதிகரிக்கிறது. உடம்பிலே விஷம் பரவுவது போல் தாபம் பரவவே ராமனுக்கு உணர்ச்சி நீங்குகிறது. திடீரென்று மூச்சும் நீங்க மூர்ச்சித்துச் சாய்ந்து விழுகிறுன் ராமன்.

கீழே விழுந்து விடாதபடி தாங்கிக் கொள்கிறுன் சுக்கிரீவன்:

> விடம்பரந் தனையதோர்
>   வெம்மை மீக்கொள,
> நெடும்பொழு(து) உணர்
>   வினே(டு)
>   உயிர்ப்பு நீங்கிய
> தடம்பெருங் கண்ணனைத்
>   தாங்கி னுன்,தன(து)
> உடம்பினில் செறிமயிர்
>   சுறுக்கென்(று) ஏறவே.

[விடம் — விஷம். பரந்து அனையதோர் வெம்மை — பரவினுற் போன்ற ஒரு தாபம். மீக்கொள — அதிகப்பட. உயிர்ப்பு — மூச்சு. தடம் பெருங் கண்ணன் — மிகப் பெரிய கண்களையுடைய ராமன். செறிமயிர் — நெருங்கிப் பொருந்திய ரோமங்கள்.]

முரட்டுக் காட்டு மனிதன் போல் இருந்த சுக்கிரீவன் ராமனது மலர் போன்ற சௌந்தரியத் திருமேனியைத் தாங்கிக் கொண்டான் என்பதைத்தான் எவ்வளவு அருமையாகக் குறிப்பிடுகிறுன் கவிஞன்:

> தடம்பெருங் கண்ணனைத்
>   தாங்கி னுன்,தன(து)
> உடம்பினில் செறிமயிர்
>   சுறுக்கென்(று) ஏறவே!

ஜீவனுள்ள சிரஞ்சீவிக் கவிதை இல்லையா?

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

324. கடலில் விழுந்து கரையேறுகிறான்!

எதிர்பாராத நிலையில் நகைகளைக் கண்டு கடுந்துயரமும் பெருங் களிப்பும் மாறி மாறி அடைந்தான். கடைசியாக விஷம் ஏறுவது போல் ஏறி உடம்பையும் உள்ளத்தையும் ஒருங்கே தகித்தது ஒரு தாபம். அதனால் தன்வசம் இழந்து உணர்வும் மூச்சும் நீங்கித் தரையில் சாய்ந்து விழுந்தான். விழும்போதே, தழுவித் தாங்கிக் கொண்ட சுக்கிரீவன் என்ன செய்கிறான், ராமனை எப்படித் தேற்றுகிறான்?

அனுதாபமும் பச்சாத்தாபமும்

அன்பனைத் தன் மார்பிலே தாங்கி அப்படியே உட்கார வைத்துக் கொள்கிறான். 'நண்பனுக்கு எவ்வளவு வேதனை நேர்ந்து விட்டது!' என்று அந்தக் கடுந் துயரத்தையும் தன் நெஞ்சாலே தொட்டுத் தாங்கப் பார்க்கிறான். ஆனால் இதைத் தாங்க முடியாமல் திணறி ஏங்கித் தவிக்கிறான்.



ராமனுடைய தாபம் கண்டு அனுதாபத்தால் தவித்து நெஞ்சு பொருமிப் புலம்பும் நேசனைப் பாருங்கள்.

தாங்கினன் இருத்தி, அத்
துயரம் தாங்கலா(து)
ஏங்கிய நெஞ்சினன்,
இரங்கி விம்முவான்;
'வீங்கிய தோளினாய்!
வினையி னேன்உயிர்
வாங்கினென், இவ் அணி
வருவித் தேன்!' என.

[தாங்கினன் இருத்தி — தாங்கி உட்கார வைத்துக் கொண்டு. தாங்கலாது — தாங்க மாட்டாமல். இரங்கி — இரக்கங் கொண்டு; (இங்கே) அனுதாபங் கொண்டு. விம்முவான் — புலம்புவானானான். வீங்கிய—பருத்த. வினையினேன் — தீவினையுடையேன். உயிர் வாங்கினென், இவ் அணி வருவித்தேன் — உன் உயிரை வாங்கத்தான் இந்த நகைகளை வர வழைத்தேன். என — என்று.]

சுக்கிரீவனுடைய அனுதாபம் பச்சாத்

தாபமாகி, 'ஐயோ! பாவி என்ன செய்துவிட்டேன்?' என்று தன்னைத் தானே நொந்து வெறுத்துக் கொள்ளச் செய்கிறது. உடனே அன்பனைத் தேற்ற வேண்டும் என்று உள்ளத்தைத் திடமாக்கிக் கொள்கிறான்.

'அண்ணா, இப்படித் துயரம் அடைந்து மூர்ச்சிக்கலாமா? உன் தேவி எந்த உலகத்தில் இருந்தாலும் தேடிக் கண்டு பிடிப்பேன்; கொணர்ந்து கொடுப்பேன்!'

காதைத் திருகி...

'அவளைப் பயமுறுத்திய அந்தக் காதகனுடைய பத்துத் தலைகளும் இருபது கைகளும் உன்னுடைய ஒரே அம்புக்குத் தான் இரையாகப் போதுமா?' என்கிறான். எனினும் அதே மூச்சில், 'நீ அந்தக் காதகனைத் தேடிப் போய் ஒரு அம்பு கூட வீணாக்க வேண்டாம். இங்கேயே இருந்துவிடு. இந்தத் தம்பி போனால் போதும். அந்தத் தலைகளைக் கூட அப்படியே விட்டுவிட்டுக் காதைத் திருகி விடுவேன், தெரியுமா? திருகிப் புத்தி புகட்டுவேன்!' என்கிறான்.

ஏதோ கர்நாடக வாத்தியார்கள் பையன்களின் காதைத் திருகிக் கல்வி புகட்டிய மாதிரி!

பூஜ்யர் ஜி. யு. போப் ஐயர் (Rev. G.U. Pope) வாத்தியாராக இருந்த காலத்திலே ஒரு வித்யார்த்தியின் காதைத் திருகி வித்தையைச் செலுத்த முயல, அந்தக் காது அப்படியே கையோடு வந்து விட்டதென்று அவர் வரலாறு தெரிவிக்கிறது. அவ்வளவு எளிதாக ராவணன் காதையும் திருகிக் கையோடு கொண்டு வந்து விடலாமென்று சுக்கிரீவன் கனாக் காண்கிறான், பாவம்!


காதைத் திருகவே அரக்கன் கதறிக் கொண்டே சீதையைக் காட்ட, 'நீ அவளை இங்கே காணும்படி நான் கொண்டு வந்து சேர்த்து விடுகிறேன்' என்கிறான்:

தேண்டிஅவ் அரக்கனைத்
  திருகித் தேவியைக்
காண்டி,யான் இவ்வழிக்
  கொணரும் கைப்பணி!.

[தேண்டி—தேடி. காண்டி—காண்பாயாக. இவ் வழி—இந்த இடத்துக்கு. கைப்பணி — கைத் தொண்டு; குற்றேவல்.]

இப்படிக் கொண்டுவந்து காட்டுவது அவ்வளவு பிரமாதமான காரியம் ஒன்றுமில்லையாம், சுக்கிரீவனுடைய அசகாய சூரத்தனத்திற்கு. கேவலம் காதைத் திருகி வரும் கைப்பணி தானாம். கைச் சேட்டையால் காதும் கையோடு வரச் சீதையும் வந்து சேர்ந்து விடுவாளாம் ராமனிடம், சுக்கிரீவனின் கைப் பணியாக.





விரைந்துபோய்...

வானர ராஜா இவ்வளவு உத்ஸாகப் பெருக்கிலே, 'நம் பெருமையை நாமே இப்படிக் கொட்டி அளக்கலாமா?' என்று கூட முதல் முதல் நினைத்துப் பார்க்கவில்லை. பிறகு 'எல்லாம் உன் பெருமைதான்! உன் தோழராக இருந்து, உன் வேல் செய்யும் பெருமை தானே எங்கள் பெருமையெல்லாம்!' என்கிறான்.

வாலி வதமாகித் தன் சொந்தக் குறை தீர்வது கூடப் பெரிதாகத் தோன்றவில்லை சுக்கிரீவனுக்கு. ராம பத்தினியைத் தேடுவதுதான் இப்போது உடனே செய்யவேண்டிய காரியம் என்று துணிகிறான்:

'என்னுடைச் சிறுகுறை
  முடிந்தல், ஈண்(டு)ஓரீஇப்
பின்னுடைத் தாயினும்
  ஆக; பேதுறும்
மின்னிடைச் சனகியை
  மீட்டு மீடுமால்,
பொன்னுடைச் சிலையினாய்!
  விரைந்து போய்'என்றான்.

[ஈண்டு – இப்போது. ஓரீஇ – ஒருவி; நீங்கி. பின் உடைத்து ஆயினும் – பின்னே கடப்பதானாலும். ஆக –

ஆகட்டும். பேதுறும் — கலக்கம் அடைந்திருக்கும். மின் இடைச் சனகி — மின்னல் போல் இடையுள்ள சீதை. மீட்டு— மீட்டுக்கொண்டு. மீடும் — மீள்+தும்; மீளுதும்; திரும்பி வருவோம். ஆல்— அசை. பொன்னுடைச் சிலை — (இங்கே) வீரப் பொலிவோடு கூடிய வில்.]

சோகத்தில் மூழ்கிய ராமன்

ராமனுடைய துயர வெறியிலே, திடீரென்று கடுந்துயரத்தில் மூழ்கியிருக்கும் சீதையே கண்ணுக்கு இலக்காகிறாள்! தன் கூர்மையான நீண்ட கண்களின் பார்வையைத் தொலைதூரம் செலுத்தி, 'கணவன் வருகிறானா, வருகிறானா?' என்று எதிர் நோக்கிய வண்ணம் ஏங்கிக் கொண்டிருக்கிறாள். 'ஆனால் நானோ அங்கே போகாமல், மலைகளோடும் தடாகங்களோடும் ஆபரணங்களோடும் புலம்பிப் புலம்பிப் பொழுது போக்குகிறேன்' என்று புலம்புகிறான் ராமன்.

வாள்நெடுங் கண்ணிஎன்
  வரவு நோக்க,யான்
தாள்நெடுங் கிரியொடும்
  தடங்கள் தம்மொடும்
பூணொடும் புலப்பிஇப்
  பொழுது போக்கினேன்,
நான்நெடுஞ் சிலைசுமந்(து)
  உழல நாணலேன்!

[வாள் நெடுங்கண்ணி — வாள்போல் கூர்மையான நீண்ட கண்களையுடைய சீதை. தாள் நெடுங்கிரி — அடிவாரத்தோடு கூடிய நீண்ட மலைகள். தடங்கள் - தடாகங்கள். பூண் - ஆபரணம். நான் நெடுஞ்சிலை — நானோடு கூடிய நீண்ட வில். உழல - திரிய. நாணலேன் - நாணம் இல்லாதிருக்கிறேன்.]

இந்த நிலையில் ராமனுக்குத் தன்னுடைய முன்னோர்களின் பெரும் புகழ் நினைவிற்கு வருகிறது, அலையலையாக. செயற்கரிய செய்த சூரிய குலப் பெரியோர்களான சகர சக்ரவர்த்தியும் அவருடைய புதல்வர்களும் கடல் தோண்டிய வைபவத்தோடு மனக்கண்முன் ஓடி வருகின்றனர். 'பகீரதப் பிரயத்தனம்' என்கிறோமே, அந்தக் கங்கை கொணர்ந்த பகீரத சக்ரவர்த்தியும் வந்து நிற்கிறான். ஆட்சியின் நீதி முறையால் புலியும் மானும் ஒரு துறையில் நீர் பருகச் செய்த — அதாவது, பகைவர்களையும் அன்பர்கள் ஆக்கி வைத்த — தாத்தா வருகிறார்! ஆம்; மாந்தாதா.

மூழ்கிக் கண்ட காட்சி

'இத்தகைய பரம்பரையில் வந்த நானோ என் மனைவியின் துயரம் தீர்க்கவும் ஆற்றல் இல்லாமல் இருக்கிறேன்!' என்று நொந்துகொள்ளும் ராமனைப் பாருங்கள்:

கருங்கடல் தொட்டனர்;
  கங்கை தந்தனர்;
பொரும்புலி மானொடு
  புனலும் ஊட்டினர்;
பெருந்தகை என்குலத்(து)
  அரசர் பின்,ஒரு
திருந்திழை துயரம்நான்
  தீர்க்க நோற்றிலேன்!

[தொட்டனர்-தோண்டினர். பொரும் புலி - (பசியில்லாமலும்) சண்டைக்கு வரும் இயல்புள்ள புலி. புனலும் ஊட்டினர் - நீருண்ணவும் செய்தார்கள். பெருந்தகை-பெருமைக் குணம். திருந்து இழை- திருத்தமான நகைகளையுடையவள்; (இங்கே) சீதை. நோற்றிலேன்- தவஞ்செய்யாதவனாயிருக்கிறேன்.]

இப்படியெல்லாம் புலம்பும் ராமன், 'என் தந்தை சத்திய வாக்குத் தவறாமல் இருக்க வேணுமே என்று மகுடம் சூடாத நான், மனைவியைப் பகைவன் கொள்ளப் பெரும் பழியை மகுடமாகச் சூட்டிக் கொண்டிருக்கிறேனே!' என்று இறுதியாகக் கதறுகிறான். இப்படி நொந்து கொண்டதும் பெருந் துன்பம் மேலிடச் சோர்ந்துபோகிறான்.

* * *

'மீண்டும் மூர்ச்சித்துப் போவானோ?' என்று வருந்தும் சுக்கிரீவன், அந்தக் கொடிய துன்பம் என்ற கடலிலிருந்து ராமனைத் தன் போன்பால் இழுத்துக் கரையேற்றுகிறான்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

325. ‘ சபாஷ், புறப்படுவோம் ’

தேற்றத் தேற்றத் தேறுதல் ஏற்படத் தான் செய்கிறது. எனினும் இந்தத் தேறுதலோ ஆறுதலோ நிலைக்கவில்லை. மீண்டும் மீண்டும் துன்பம் மேலிடச் சோர்ந்தே போகிறான்.

மன நோய்க்கு மருந்து எங்கே ?

‘ இந்த ஆறுதல் எல்லாம் எனக்குத் தாரகமாகாது. மரணமே ஆறுதல், மரணமே தாரகம். நீ தேற்றாதிருந்தால் இதற்குள்ளே மரண மடைந்திருப்பேன். இப்படிச் சிறிது காலமாவது உயிர்விடாமல் பிழைத்திருப்பதும் நல்லதுதான். நண்ப, இனி உன் குறைதீர்த்தாலன்றி உயிர் விடேன்’ என்கிறான்.

ராமனுடைய வார்த்தையைச் சுக்கிரீவனுடன் நாமும் கேட்டுப் பார்க்கலாமே :

ஐய ! நீ
ஆற்றலின்
ஆற்றினேன்
அல(து)
உய்வனே ?
எனக்(கு) இதின்
உறுதி
வேறுண்டோ ?
வையகத்(து)
இப்பழி
தீர மாய்வது
செய்வன்; நின்
குறைமுடித்(து)
அன்றிச்
செய்கலேன்.

[ஆற்றினேன் அலது - ஆற்றிக் கொண்டேனே அல்லாமல். உய்வனே – உய்வனோ ; நான் பிழைத்திருக்க முடியுமா ? இதின் – இதைக் காட்டிலும் ; மரணத்தைக் காட்டிலும். வையகத்து – உலகத்திலே. மாய்வது செய்வன் – இறத்தலைச் செய்வேன். முடித்து அன்றி – முடித்தால் அன்றி. செய்கலேன் – (அது) செய்ய மாட்டேன்.]

ராமனுக்குத் தான் இருக்கும் நிலையில் சாதலே இனியதென்று தோன்றுகிறது. ‘ பலநீட்டுக்கு ஒரு முழுக்கு ’ என்ற ரீதியில் கவலைகளுக்கெல்லாம் ஒரு மருந்து மரணம்தான் என்று தோன்றுகிறது. ஆனால் நண்பனுக்காகச் சிறிது காலமாவது தன் உயிரைக் காப்பாற்றி வைத்துக் கொள்ளும் தியாகத்தை மேற்கொள்ள விரும்புகிறான்.



அப்படியானல் தானே சுக்கிரீவன் குறை முடியும் ? நண்பன் குறையை முடித்து அவனை வாழவைத்துத் தன் குறையை மரணத்திலே முடித்துக் கொள்ளச் சித்தமாயிருக்கிறான் ராமன். இதற்குச் சுக்கிரீவன் இனி என்ன தான் சொல்ல முடி

யும், செய்ய முடியும்? இந்த மன நோய்க்கு மருந்து இவனிடம் இல்லை!

தொழிலே மருந்து

இதுதான் சமயம் என்று ஒரு வைத்தியன் குறுக்கிடுகிறான். மன நோய்க்கு ஒரு மானஸ வைத்தியம்: சோர்ந்து கொண்டிருக்கும் உள்ளத்தை உடனே செயலில் திருப்பி விடப் பார்க்கிறான். ஒரு பெருந் தொழிலில் ராமனுள்ளத்தைத் திருப்பி விடக் 'கொடுந் தொழில் வாலி'யை நினைப்பூட்டுகிறான்:

கொடுந்தொழில் வாலியைக்
　கொன்று, கோமகன்
கடுங்கதி ரோன்மகன்
　ஆக்கிக், கைவளர்
நெடும்படை கூட்டினால்
　அன்றி, நேடரி(து)
அடும்படை அரக்கர்தம்
　இருக்கை, ஆணையால்.

[கோமகன் - அரசன். கைவளர் - மிகுதியாக வளர்ந்திருக்கும். நெடும் படை - பெரிய வானரப்படை. நேடரிது - தேடுதற்கு அரியது. அடும் படை அரக்கர் - கொல்லும் ஆயுதங்களையுடைய; அதாவது, கொலைக் கருவிகளை அதிகமாய்க் குவித்துக் கொண்டிருக்கும், அரக்கர்கள். அரக்கர் தம் இருக்கை - அரக்கர்கள் இருப்பிடம். ஆணையால் - கட்டளைப்படி.]

ஏன் உடனே இக் கடுந் தொழில்?

அரக்கர்கள் வசிக்கும் இடம் எளிதில் அறிந்து கொள்ள முடியாதது என்கிறான் அநுமன். இமைப் பொழுதில் எந்த உலகத்திற்கும் போய்ச் சேருவார்களாம். அங்கங்கே தமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய பொருள்களையெல்லாம் இஷ்டப்படியே கொள்ளை கொள்வார்களாம். இழந்தவர்களெல்லாம், 'எங்கள் கொடிய வினைதான் இப்படி வந்து போயிற்று!' என்று நொந்து போவார்கள்:

எவ்வுல கங்களும்
　இமைப்பின் எய்துவர்;
வவ்வுவர் அவ்வழி
　மகிழ்ந்த யாவையும்:
வெவ்வினை வந்தென
　வருவர், மீள்வரால்,
அவ்அவர் உறைவிடம்
　அறியற் பாலதோ?

[எய்துவர் - போய்ச்சேருவார்கள். வவ்வுவர் - அபகரித்துக் கொள்வர். அவ் வழி - அந்த இடங்களில். வெவ் வினை - கொடிய வினை. வந்து என - வந்தாற்போல. மீள்வரால் - மீண்டு செல்வார்கள். அவ்அவர் - அந்தத் தன்மையுள்ள அந்த அரக்கர்கள். அறியற்பாலதோ-அறியத் தக்கதாகுமோ.]

சீதையை ஒவ்வோரிடமாகப் போய்த் தேடினால், அதற்கு எத்தனையோ ஆண்டுகள் வேண்டும்! அன்றி, அந்த மாய அரக்கர்கள் அடிக்கடி வெவ்வேறு இடங்களில் கொண்டு போய்ச் சிறை வைப்பதும் அசாத்திய மில்லையே. ஆகையால், எல்லா இடங்களிலும் ஏக காலத்தில் போய்த் தேட வேண்டும் என்பது அநுமன் ஆலோசனை:

ஒருமுறை யேபரந்(து)
　உலகம் யாவையும்
திருமகள் உறைவிடம்
　நேர வேண்டுமால்.

[ஒரு முறையே—ஒரே சமயத்திலே. பரந்து - பரவிப் போய். திருமகள் உறைவிடம் - சீதாலட்சுமியின் இருப்பிடம். நேர வேண்டும் - தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்.]

இப்படித் தேடுவதற்கு 'நெடும் படை கூட்டினால் அன்றி' முடியாது. வானரப் படையோ 'எழுபது வெள்ளம்' என்று கணக்கிடத் தக்க பெருந் தொகை யுள்ளது. 'இந்த வெள்ளத்தைப் பரப்பி விட்டால் உலக மெங்கும் கடல்போலப் பரந்து மூடி விடும்!' என்கிறான் அநுமன்:

எழுபத்(து) ஆகிய
　வெள்ளத்(து) எம்படை
ஊழியிற் கடலென
　உலகம் போர்க்குமால்!

[எழுபத்து ஆகிய வெள்ளம் - எழுபது வெள்ளம். எம் படை - எங்கள் வானரப் படை. ஊழியில் கடல் என -

பிரளய காலத்திலே பொங்கும் கடல் போல. உலகம் போர்க்கும் — உலகம் முழுவதும் பரந்து மூடிவிடும்.]

இவ்வளவு வானர சேனையும் நம் கட்டளைக்கு உள்ளாகி ஏக காலத்தில் உலகமெங்கும் போய்ச் சீதையைத் தேடவேண்டும். இவ்வளவு படையும் இப்போது எதிரியான வாலி வசமாக அல்லவா இருக்கிறது?

சொல்லின் வெற்றி

இந்தக் குறிப்பை வெகு விநய மாய் அதி உசிதமாய் அனுமன் உய்த் துணர வைத்தது தான் தாமதம்; ராமன் பளிச்சென்று சோர்வு நீங்கி 'சபாஷ்' போடுவதும், உடனே இவர்கள் வாலி இருக்கும் இடத்தை நோக்கிப் புறப்படுவதும் எவ்வளவு வேகமாய் நடக்கின்றன பாருங்கள் :

'ஆதலால் அன்னதே
அமைவ தாம்என
நீதியாய்! நினைந்தனென்'
எனநி கழ்த்தினன்;
'சாதுவாம்' என்றஅத்
தனுவின் செல்வனும்,
'போதும்நாம் வாலிபால்'
என்னப், போயினர்.

[அன்னதே - அதுவே. என நினைந்தனென் - என்று நினைத்தேன். நிகழ்த்தினன்-தன் பெருஞ் சொல்லைச் சொல்லி முடித்தான். சாது - ஸாது; 'சபாஷ்' என்று பொருள்படும் வட சொல். தனுவின் செல்வன் — வில்லின் செல்வன். போதும் — போவோம். என்ன — என்று சொல்ல. போயினர் — போனார்கள்; போகத் தொடங்கினார்கள்.]



இப்பாட்டின் முதல் இரண்டு அடிகளில் சொல்லின் செல்வனுடைய பண்பாடும் விநய சம்பத்தும் விளங்க, பின் இரண்டு அடிகளில் வில்லின் செல்வனுடைய உடன்பாடும் குதூகலமும், சொல்லின் செல்வனுடைய வெற்றியும் விளங்குகின்றன.

சுக்கிரீவன் காணாத வெற்றியை அனுமன் கண்ட செய்திதான் இப்பாட்டு. இந்த நிகழ்ச்சியோடு நிகழ்ச்சியாகக் காணத் தொடங்குகிறோம், ராம லட்சுமணர் மலைச்சாரல் வழியாகப் போவதையும், சுக்கிரீவனும் அனுமன் முதலான மந்திரிகளும் வழிகாட்டி முன் போவதையும்.

மலைச் சாரலில்

அந்த மலை வழியின் பக்கங்களில் எத்தனையோ மரங்கள் நெருங்கிச் செழித்து வளர்ந்திருக்கின்றன. ஆச்சா மரங்கள் ஒரு புறம். அடி பருத்த தமால மரங்கள் ஒரு புறம். ஏல மரங்கள் ஒரு புறம். அங்கங்கே காட்டு வாழைகள், மாமரங்கள், சுரபுன்னை மரங்கள். இத்தகைய மலைச் சாரல் வழியாக மள மளவென்று போய்க் கொண்டிருப்பவர்களை இதோ பார்க்கிறோம் :

தங்கு சாலம் மூலம் ஆர்த –
 மாலம் ஏலம் வாழைமாப்
பொங்கு நாக மும்து வன்று
 சார லூடு போயினர்.

[தங்கு சாலம் - நிலைபெற்ற ஸால மரங்கள் என்ற ஆச்சா மரங்கள். மூலம் ஆர் தமாலம் - அடி பருத்த தமால மரங்கள். மா - மாமரங்கள். பொங்கு நாகம் - பொங்கி வளரும் சுரபுன்னை மரங்கள். துவன்று - நெருங்கிய.]

இம்மரங்களுக்கிடையே வானர வழிகாட்டிகளுடன் ராஜசிம்மங்கள் போய்க் கொண்டிருப்பதை இன்னும் கவனமாகப் பார்ப்போம் :

வெங்கண் ஆளி ஏறும், மீளி
 மாவும், வேக நாகமும்,
சிங்க ஏ(று)இ ரண்டொ டும்,தி—
 ரண்ட அன்ன செய்கையார்,
தங்கு சாலம் மூலம் ஆர்த —
 மாலம் ஏலம் வாழைமாப்
பொங்கு நாக மும்து வன்று
 சார லூடு போயினர்.

[வெங்கண் ஆளி ஏறும் - பயம் தரும் கண்களோடு கூடிய ஆண் யாளியும். மீளி மாவும் - பராக்கிரமமுள்ள புலிகளும். வேக நாகமும் - வேகமாய்ச் செல்லும் மதயானைகளும். சிங்க ஏறு இரண்டொடும் — இரண்டு ஆண் சிங்கங்களுடனும். திரண்ட அன்ன - திரண்டு சென்றன போன்ற.]

இரண்டு சிங்கங்களை அழைத்துக் கொண்டு ஒரு யாளி போகிறதாம். அந்த யாளிக்குக் கூட்டாளிகள் புலிகளும் மதயானைகளும். இப்படிச் சொல்லத் தோன்றுகிறது, எல்லாருக்கும் முன்னே வழி காட்டிச் செல்லும் சுக்கிரீவனையும் அனுமன் முதலான கிங்கரர்களையும் கடைசியாகச் செல்லும் ராமலட்சுமணரையும் பார்க்கும் போது.

இந்தச் சந்த விருத்தத்தின் சப்த ஜாலங்களை அனுபவிக்க அனுபவிக்க மலைச்சாரல் அப்படியே கண் முன் செல்லுகிறது, கம்பீரமாகச் சென்று கொண்டிருக்கும் ராம லட்சுமணருடனும் வானர வீரர்களுடனும்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

326. என்ன வேகம்! என்ன ஆர்ப்பாட்டம்!

மரங்களுக்கிடையே ஊஞ்சலாடிக் கொண்டிருக்கும் மலைவாசிகளான பெண்களின் கண்கள் நீண்டு நோக்கு கின்றன. சிங்கம் புலிகள் எங்கேயோ திரண்டு போவது போலப் போய்க் கொண்டிருக்கும் வீர புருஷர்களைத் தான்.

ஏறி இறங்கும் பாதையில்

மரங்களும் இந்த அபூர்வ வருகையை, இந்த அதிசயச் சேர்த்தியை உணர்ந்து கொண்டதுபோல் தழைகள் காற்றிலே ஊஞ்சலாட உற்று நோக்கு கின்றனவோ!

மலைச்சாரல்களில் அங்கங்கே சஞ்சரிக்கும் மேகங்களும் குளிர்ந்து அனுபவிக்கின்றனவா இந்த விஜயத்தை? வாலிவதம் என்ற விஜயத்திற்கு உரிய வருகையல்லவா?

ஜில்லென்று வாசனை வீசுகிறது. திரும்பிப் பார்த்தால் சண்பகச் சோலை, மஞ்சள் நிற மலர்களும் பசுந் தளிர்களுமாய்.

சில இடங்களில் சோலையு மில்லை, மரங்களும் இல்லை. அந்த மொட்டைக் குன்றுகள்தான் எவ்வளவு அழகா யிருக்கின்றன!



இந்த மலை வழியில் ஏறியும் இறங்கியும், ஓசைப்படுத்திக்கொண்டும் போய்க் கொண்டிருக்கும் ராம லட்சுமணரைக் கோஷ்டியுடன் சிறிது கவனிப்போம். (இந்தச் சந்தச் செய்யுளை எல்லாரும் எளிதில் பொருள் விளங்க வாசித்து அனுபவிக்க உதவுமாறு வழக்கமாகச் செய்யுளை அச்சிடும் முறையில் அச்சிடவில்லை.)

அறங்கள் நாறு மேனியார்,
  அரிக்க ணங்களோடும், அங்(கு)
இறங்குபோதும் ஏறுபோதும்,
  ஈறிலாத ஓதையால்
கறங்கு வார்கழற்கலன்
  கலிப்ப, முந்து கண்முகிழ்த்(து)
உறங்கு மேகம் நன்குணர்ந்து,
  மாகமீதுலாவுமே!

[அறங்கள் நாறு மேனியார் - மேனியெல்லாம் தருமம் மணக்கும் என்று சொல்லும்படி தரும சொரூபமாய்த் திகழும் ராம லட்சுமணர். அரிக் கணங்கள் - வானர கோஷ்டி. ஈறிலாத ஓதை - முடிவில்லாது தொடர்ச்சியாகக் கேட்கும் ஓசை. கறங்கு - ஒலிக்கின்ற. வார் கழல் கலன் - நீண்ட வீரக் கழலாகிய ஆபரணம். முந்து - முன்பு. கண் முகிழ்த்து -

கண் மூடி. நன்கு உணர்ந்து - நன்றாய் உறக்கம் தெளிந்து. மாகம் மீது - பெரிய வானத்தில்.]

ராமலட்சுமணரைப் பார்த்ததுமே 'எத்தனை தருமங்கள் உண்டோ அத்தனை தருமங்களும் பரிமளிக்கின்றன, பிரகாசிக்கின்றன இத்திருமேனிகளில்' என்று சொல்லத் தோன்றுகிறதாம். அவ்வளவு வசீகரமான சௌந்தரியம். நன்றே நினைத்து நன்றே விரும்பி நன்றே புரிந்து நல்லற மயமாகவே முகத்தையும் மேனியையும் ஜொலிக்கச் செய்து கொண்ட நல்லவர்கள்.

இவர்கள் வானர கோஷ்டியுடன் மலைச் சாரல்களில் வளைந்து வளைந்து ஏற்றமும் இறக்கமுமாகச் செல்லும் அந்த மலை வழியில் நடக்கும்போதே வீரக் கழல்கள் ஓசைப்படுகின்றன. தங்கள் கம்பீர வீர நடையால், விசை நடையால், அந்த வீரக் கழல்களை இடையறாது ஓசைப் படுத்திய வண்ணம் போகிறார்கள்.

இன்னும் சில மலைக் காட்சிகள்

இந்த விசை நடையை மேலும் காண்போம்:

நீடு நாக மூடு மேகம்
ஓட, நீரும் ஓட, நேர்
ஆடு நாகம் ஓட, மான
யானை ஓட, ஆளிபோம்

மாடு நாக நீடு சாரல்;
வாளை ஓடும் வாவியூ(டு)
ஓடு நாகம் ஓட, வேங்கை
ஓடும்; யூகம் ஓடுமே.

[நீடு நாக மூடு - நீண்ட வானத்திலே. நீரும் ஓட - மழை பெய்து நீர் வழிந்தோட. நேர் ஆடு நாகம் — நிமிர்ந்து படமெடுத்தாடுகிற பாம்புகள். மான யானை - மானமுள்ள யானைகள். ஆளி-யாளி; சிங்கம் போன்ற ஒருவகைப் பிராணி. மாடு நாகம் நீடு சாரல் - பக்கங்களில் சுரபுன்னை மரங்கள் செழித்து வளர்ந்திருக்கும் மலைச்சாரல். வாளை - வாளை மீன்கள். வாவியூடு - சுனைகளிலே. ஓடு நாகம் - ஓடும் இயல்புள்ள நீர்ப்பாம்புகள். யூகம் - கருங்குரங்கு.]

நடையின் விசையும் ஓசையும், பல வேறு பிராணிகளும் கலைந்தோடக் காரணம். சுரபுன்னை மரங்களுக்கிடையே படமெடுத்தாடும் பாம்புகள் ஓடுகின்றன. யானைகள் ஒருபுறம் ஓட, யாளிகள் ஒரு புறம் ஓடுகின்றனவாம். வாவிகளில் மீன்களும் நீர்ப்பாம்புகளும் ஓடுகின்றன. மரக்கிளைகளில் கருங்குரங்குகள் சாடி ஓட, அம் மரங்களுக்கிடையே வேங்கைப் புலிகள் பாய்ந்தோடுகின்றனவாம். அப்போது வான வீதியில் மேகம் ஓட மழை நீரும் ஓடி வழிகிறதாம்.

வேறொரு காட்சி. ஒரு புறம் மலையருவி பாய்கிறது. சிறிது தூரத்திலே கொழுத்து மதம் பிடித்த இரண்டு யானைகள் ஒன்றோடொன்று மோதிப் பாய்ந்து போரிடுகின்றன. சில தினைப் புனங்களில் அந்தக் கதிர் வளம் கண்டு குருவிகள் கொத்தப் பாய்கின்றன, தினைப்புனம் காக்கும் சிறுமி பராக்காயிருக்கும் போது.



இப்படி யெல்லாம் பாயும் காட்சிக ளைக் குரங்குகள் மரக்கிளைகளில் பாயும் காட்சியுடன் சேர்த்துப் பாருங் கள் :

அருவி பாயும்; ஒன்றின் ஒன்றின்
ஆனை பாயும்; ஏனலில்
குருவி பாயும்; ஓடி மந்தி
கோடு பாயும் மாடெலாம்.

[ஒன்றின் ஒன்றின் – ஒன்றன்மேல் ஒன்று. ஏனலில் – தினைக் கதிர்களில். மந்தி – பெண் குரங்கு. கோடு – மரக் கிளை. மாடெலாம் – பக்கங்களில் எல்லாம்.]

கிஷ்கிந்தாபுரியில் ஆலோசனை

ராம லட்சுமணர், சுக்கிரீவன் முதலானவர்களுடன் வாலி வாழும் கிஷ்கிந்த மலையை அடைகி றார்கள் :

அன்ன தாய குன்றின் ஆறு
சென்ற வீரர், ஐந்தொடைந்
(து)
உன்ன லாய யோச னைக்கும்
உம்பர் ஏறி, இம்பரின்
பொன்னின் நா(டு)இ ழிந்த
தன்ன
வாலி வாழ் பொருப்பிடம்
துன்னி னார்கள், 'செய்வ
தென்னை?'
என்று நின்று சொல்லுவார்.

[அன்னதாய – மேலே சொன்ன தன்மைகள் உள்ளதான. குன்றின் ஆறு – மலை வழியிலே. ஐந்தொடு ஐந்து – பத்து. உன்னலாய – எண்ணத்



தக்க. யோசனைக்கும் உம்பர் ஏறி – யோசனை தூரத்திற்கும் அதிகமாய்க் கடந்து. இம்பரில் - இங்கே ; இந்த உலகில். பொன்னின் நாடு - பொன்னுலகமான சொர்க்க லோகம். இழிந்தது அன்ன - இறங்கி வந்துவிட்டது போன்ற. பொருப்பிடம் - மலைப் பிரதேசம். துன்னினார்கள் - அடைந்தவர்களாய். என்னை - என்ன.]

கிஷ்கிந்தாபுரிக்கே வந்து விடுகிறார்கள். அந்த மலைப்பிரதேசத்தைப் பார்த்ததும், 'பொன்னாடு மண்ணிலே இறங்கி வந்துவிட்டதோ!' என்று சொல்லத் தோன்றுகிறதாம். அப்படி அழகு செய்து மாட்சிபெற வைத்திருக்கிறார் மாட்சிமை தங்கிய மகாராஜா வாலியார் இந்த மலைப்பிரதேசத்தை.

'வாலி வாழ் பொருப்பிடம்' என்று சுக்கிரீவன் சொல்வதற்கு முன்னமே தெரிந்து விடுகிறது ராமலட்சுமணர்களுக்கு, அந்தப் பிரதேசத்தைப் பார்த்ததும். 'வந்து விட்டோம், இனிமேல் செய்வதென்ன?' என்று ஆலோசனை செய்கிறார்கள்.

ஆலோசனை நீடிக்கவில்லை. ராமன் பளிச்சென்று தன் அபிப்பிராயத்தை வெளியிட்டதும் அது சரியென்று படுகிறது சுக்கிரீவனுக்கு. ராமன் வரும்போதே என்ன செய்வதென்று சிந்தித்துக் கொண்டே வந்தான் என்று கருதலாம். சில கருத்துக்கள் உள்ளத்திலே தோன்றலாயின. இப்போது, 'இது தான் நல்லது' என்று ஒன்றை நிச்சயித்துக் கொள்கிறான்.

சுக்கிரீவனை நோக்கி ராமன், 'இனி நீ வலியப் போருக்கு வாலியை அழைக்க வேண்டியதுதான்' என்கிறான். ஆனால் அது அவ்வளவு லேசான காரியமா? வாலியென்றால் விஷமல்லவா? நடுங்கத் தக்க கொடிய விஷமல்லவா சுக்கிரீவனுக்கு?

எனினும், சுக்கிரீவன் இப்போது நடுங்கவில்லை. ஏனென்றால் ராமன் தன் திட்டத்தில் ஓர் அம்சத்தையும் மறைத்து வைக்கவில்லை. 'நான் மறைந்து நின்று அம்பு போடுவதாகத் துணிந்து விட்டேன்' என்று

பட்டவர்த்தனமாய்ச் சொல்லி விடுகிறன்.

வாலியின் வரபலம் தெரிந்த சுக்கிரீவனையும் ராமனுடைய துணிவு துணிந்து செயலாற்றத் தூண்டுகிறது. 'தருமமூர்த்தியான ராமனும் அப்படிச் செய்வாஞ? இல்லாவிட்டால் வெற்றி எப்படி?' என்றுதான் சுக்கிரீவன் எண்ணி யிருப்பான்.

எதிரே போய்த் தன் பலத்தில் பாதியை இழக்கவில்லையென்றால் வீரமூர்த்தி வெற்றி பெறுவது திண்ணம். ஏழு மரா மரங்களையும் துளைத்த ராமபாணம் வாலியின் வைர மார்பையும் துளைத்து விடும் என்பதில் துளியும் ஐயமில்லை சுக்கிரீவனுக்கு. எனவே ராமனின் உள்ளக் கருத்தை உள்ளபடி உணர்ந்து கொண்டதும் ஆரவாரஞ் செய்கிறன் சுக்கிரீவன்.

ஏக ஆர்ப்பாட்டம்

இடித்து ரப்பி 'வந்து போர்எ-
திர்த்தி யேல்,அ டர்ப்பன்'
என்(று)
அடித்த லங்கள் கொட்டி வாய்ம-
டித்த டுத்த லங்குதோள்
புடைத்து நின்று ளைத்த பூசல்
புக்க தென்ப, மிக்கிடம்
துடிப்ப அங்கு றங்கு வாலி
திண்செ விந்தொ ளைக்கணே.

[இடித்து உரப்பி - இடியிடித்தாற் போல் அதட்டி. எதிர்த்தியேல் - எதிர்ப்பாயானுல். அடர்ப்பன் - தொலைத்துப் போடுவேன். அடித் தலங்கள் - கால்கள். அடுத்து - சமீபத்தில். அலங்கு-விளங்குகிற. புடைத்து-தட்டி. உளைத்த - ஊளையிட்டு அழைத்த; கொக்கரித்துக் கூப்பிட்ட. பூசல் - ஆரவாரம். புக்கது - நுழைந்தது. மிக்க இடம் துடிப்ப - இடது பக்கம் மிகுதியாய்த் துடிக்கும்படி. அங்கு உறங்கு வாலி - அந்தக் கிஷ்கிந்தாபுரி அரண்மனைக்குள்ளே உறங்கிக் கொண்டிருக்கும் வாலியின். திண் செவி - வலிய காதுகளின். தொளைக் கண் - தொளையிலே.]

பாட்டைப் பாடிப் பாடிப் படிக்கப் படிக்க சுக்கிரீவனுடைய கொக்கரிப்பெல்லாம் அப்படியே நம்முடைய காதிலும் விழுந்து துளைத்து விடுமோ என்ற திகைப்பு ஏற்படுகிறது.

வாலியைக் கண்டு அஞ்சிச் சுரம் பிடித்துக் கிடந்தவன், இப்போது புதியதோர் அரோக திடகாத்திரம் பெற்று இடிக்குரலில் வாலியைத் துணிந்து அதட்டவும் சக்தி பெறுகின்றன், நெஞ்சுத் துணிவு பெறுகின்றன்.

இந்த ஆரவாரம், இந்தச் சுக்கிரீவனின் ஆர்ப்பாட்டம் வாலியின் செவியைத் துளைத்து எழுப்பிவிட்டதென்று கூறும் கவிஞன், இந்தப் பாட்டு என்ற மந்திர சக்தியால் அந்த ஆர்ப்பாட்டத்தை நம்முடைய செவியிலும் நாமும் திகைக்கப் போட்டுப் பார்க்கிறர் என்று சொல்லத் தோன்றுகிறது, சப்த ஜாலம் செய்யும் இந்திர ஜாலத்தை நோக்கும் போது.

வேகமாய் வந்தார்கள். வேகமாய் ஆலோசித்தார்கள். ஆர்ப்பாட்டமும் வேகமாகவே நடக்கிறது. குகையில் கிடக்கும் சிங்கம் வேகமாகவே விழித்துக் கொள்ளப் போகிறது.

தென்னாட்டுச் செல்வங்கள்



91
பிற்காலக் கோயில்

'காஞ்சி வரதப்பா என்றால் எங்கு வரதப்பா என்கிறாயே!' என்ற பழமொழியிலிருந்தே காஞ்சி வரதர் கோயில் தமிழ் நாடெங்கும் பிரசித்தம் என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். 'பெருமாள் கோவில்' என்றே காஞ்சிபுரத்தையும் வரதராஜப்பெருமாள் கோவிலையும் சிறப்பித்துப் பேசுவதுண்டு. எனினும் இந்தக் கோயில் பிற்காலக் கோயில்தான்,—இந்தப் பழமொழியும் பிற்காலப் பழமொழிதான்.

கோயிலின்தோற்றமே, 'இது பழைய காலத்துக் கோயில் அல்ல' என்பதற்குச் சான்றுதான். அழகுக் களஞ்சியமான நூற்றுக்கால் மண்டபத்தைத்தான் பாருங்கள். இங்குள்ள சிற்பச் செல்வமெல்லாம் பழைய காலச் செல்வம் அல்ல; பிற்காலச்செல்வம்தான்.

புராண கதை

இந்தப் பெருமாளை, 'அத்திகிரி வரதன்' என்றும் 'அத்திகிரி அருளாளன்' என்றும் சொல்வதுண்டு. அத்திகிரி என்ற மலையைச் சமமாக்கி ஒரு யாகசாலை நிர்மாணஞ் செய்துகொண்டு பிரம்மா தமது மன நிம்மதிக்காக யாகம் செய்தாராம். அவருடைய தர்ம பத்தினியான சரஸ்வதியே கோபங் கொண்டு யாகத்தைக் கெடுக்க வேகவதி நதியாகப் பொங்கி வந்தாளாம். அந்த வேகத்தை மட்டுப்படுத்தி அவளைச் சமாதானப்படுத்தி யாகத்தைப் பூர்த்தி செய்ததும், வரதராஜர் தோன்றி மனச் சுத்தமும் மனச் சமாதானமும் பிரம்மாவுக்கு ஏற்படும்படி அருள் புரிந்தாராம்.

இப்படி வரதராஜர் அவதரிப்பதற்கு முன்பே, 'அழகிய சிங்கன்' என்ற நரஸிம்மர் பிரசித்தமாக இருந்தாரென்றும், அதற்கும் முன்பு

சித்திர ராமாயணம்

வாலி காவியம்

பி.ஸ்ரீ

327. வசீகர ஆரம்பம்

ஒரு மலைக் குகையில் கவலையின்றி உறங்கிக் கொண்டிருக்கிறது ராஜ சிங்கம். வெளியே யானை யொன்று வந்து நிற்கிறது. நிற்பது மட்டுமா? வீரிடுகிறது இடி யிடித்தாற் போல. யானையின் முழக்கம் குகைக்குள்ளே புகுந்து சிங்கத்தின் செவிக்குள்ளே விழுகிறது. உறக்கம் கலைகிறது. சிங்கம் எழுகிறது, 'அறிவுற்றுத் தீ விழித்து', சோம்பல் முறித்து நிமிர்கிறது. உடம்பை உதறிப் பிடரி ரோமம் பொங்கக் கர்ஜித்த வண்ணம் பாய்ந்து புறப்படுகிறது. மத யானையின் கதி என்ன ஆகும்? இப்படியும் ஒரு மத மயக்கம் உண்டா?



ஆர்ப்பாட்டமும் அட்டகாசமும்

ஆஹா, என்ன மதி மயக்கம்! சுக்ரீவன் ஆர்ப்பரிக்கிறான், 'போருக்குப் புறப்படு, புறப்படு' என்று. கால் தட்டித் தோள் கொட்டிச் செய்யும் கோப ஆரவாரம் வாலி காதில் விழுகிறது. அந்த அரண்மனை கிஷ்கிந்தாபுரியில் மலையிடையே குகை போன்ற வாய்ப்புடன் அமைந்திருக்கிறது.

அங்கே பாற்கடல் மீது பாற்கடல் கிடப்பது போல் வெண்மலர் விரித்த வெண்பட்டு மெத்தைமீது உறங்கிக் கொண்டிருக்கிறான் வீர வாலி:

மாற்பெருங்
கடகரி
முழக்கம்,
வாளரி
ஏற்பது
செவித்தலத்து
என்ன,
ஓங்கிய
ஆர்ப்பொலி
கேட்டனன்,
அமளி
மேல்ஒரு
பாற்கடல்
கிடந்ததே
அனைய
பான்மையான்.

[மால் பெருங்கடகரி - மயக்கம் கொண்ட பெரிய மதயானை. வாள் அரி - கொடிய சிங்கம். செவித்தலத்து - செவிகளில். ஆர்ப்பு ஒலி - (கோப) ஆரவாரம். அமளி - படுக்கை. கிடந்ததே அனைய - கிடந்தது போன்ற. பான்மையான் - தன்மையுள்ள வாலி.]

சுக்கிரீவனுடைய கோப ஆர்ப்பாட்டத்திற்கு எதிராகக் கிளம்பியது வாலியின் வீர அட்டகாசம், வீரச் சிரிப்பு— வைரத்தோள் குலுங்க வாலி சிரித்த பெரும் பேய்ச் சிரிப்பு :

உருத்தனன் பொரஎதிர்ந்(து)
இளவல் உற்றமை,
வரைத்தடந் தோளினன்
மனத்தின் எண்ணினன்,
சிரித்தனன் !

[உருத்தனன் — கோபித்து. பொர எதிர்ந்து — போர் செய்ய எதிர்த்து. இளவல் — தம்பி. உற்றமை — வந்த நிலைமை. வரைத் தடந்தோளினன் — மலைபோல் உறுதி வாய்ந்த, வைரம் பாய்ந்த, பெரிய தோள்களையுடைய வாலி.]



போரில் எத்தனை தடவை தோற்று ஓடி நடுங்கி ஒளித்துக்கொண்டான்; இப்போது வந்து வலியப் போருக்கு அழைத்து ஆர்ப்பாட்டம் செய்கிறானே! அந்த இகழ்ச்சி இப்படி வாலிக்கு ஒரு சிரிப்பாகப் பொங்கியதில்தான் ஆச்சரிய மென்ன? சிரிப்பாக ஆரம்பித்தது வீர அட்டகாசமாகி அந்த மலைப்புறங்களை அதிரச் செய்கிறது.

நீயை அணைக்குமா தேவாமிர்தம்?

எழுந்தான் வாலி வெகு வேகமாய். வீரத் தோள்களை உதறிக்கொண்டான். உடல் பூரிக்கிறது. கோபாக்கினியைக் கண்கள் பொறி பொறியாய்ச் சிந்து கின்றன. புகை புகையாய் வருகிறது மூச்சுக்காற்று. இதயம் கொதிக்க, ஒரு கையால் மற்றொரு கையைத் தட்டு கிறான், 'வந்தேன், வந்தேன்' என்று. தோள்களையும் கொட்டுகிறான்.

இந்த நிலையில் மனைவியான தாரை தடுக்கிறாள். அவிழ்ந்து தொங்கும் கூந்த லோடு தடுக்க முயலும் மெல்லியலையும், கோபாக்கினி கக்கும் கண்ணும் முகமு மாய் ஜொலிக்கும் வாலி என்ற விஷாக் கினியையும் பாருங்கள்:

ஆயிடைத் தாரைஎன்(று)
  அமிழ்தின் தோன்றிய
வேயிடைத் தோளினாள்
  இடைவி லக்கினாள்,
வாயிடைப் புகைவர
  வாலி கண்வரும்
தீயிடைத் தன்நெடுங்
  கூந்தல் தீகின்றாள்!

[ஆயிடை — அப்பொழுது. அமிழ் தின் தோன்றிய — அமிர்தம் போலத் தோன்றுகிற. வேயிடைத் தோளினாள் — இள மூங்கிலின் தன்மையைத் தன் னிடம் கொண்ட தோள்களையுடைய வள். இடை விலக்கினாள் — (வெளியே குதித்துக் கொண்டிருக்கும் வாலியை)க் குறுக்கிட்டுத் தடுத்தாள். வாயிடை — வாயிலிருந்து. வாலி கண் வரும் — வாலியின் கண்களிலிருந்து வருகின்ற. தீயிடை — தீயில். கூந்தல் தீகின்றாள் — எரிகின்றது போலத் தோன்றும் கூந்தலோடு கூடியவளாய்.]

புகை கக்குவதுபோல் வாய் துடிக்க, தீயைக் கக்குவது போல் கண்கள் ஜொலிக்க வாலியை எவ்வளவு தெளி வாய்ப் பார்க்கிறோம்! 'அந்தக் கோபத் தீயிலே தீகின்றது கூந்தல்!' என்று அஞ்சுமாறு நீளமாக அவிழ்ந்து தொங் கும் கூந்தல், ஜிவ் ஜிவ் என்று ஜொலிக் கும் கண்களுக்கு எதிரே ஒளிர்கின்றது. வாலி கோபம் என்ற விஷ நெருப்பை அடக்க முயலும் அமிர்தம் போலத் தோன்றுகிறாள்!

'வேயிடைத் தோளினாள்' என்று, உருண்டு திரண்டு நீண்டு வளர்ந்தெழும் இள மூங்கில் போன்ற அந்தத் தோள் களையும் காட்டி, அத் தோள் மீது குலைந்து தொங்கும் கூந்தலுடன், இடை விலக்கும் தேவியை எவ்வளவு பிரத்தியட்சமாக்கி விடுகிறான் கவிஞன்.

அந்த உயிரே அமிர்தம்!

'விடு, விடு. விலக்காதே' என்று திமிறித் தடை மீறிப் போக முயல்கின் றான் வாலி. முரட்டுத்தனமாக மீறிச் செல்லவும் இல்லை. அந்த அன்புத் தளையி லிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயலும் உக்கிரத்தையும், அதே சமயம் அவள் அன்பிற்குக் கட்டுப்பட்டு அந்த வார்த்தைக்குச் செவி சாய்த்து நிற்கும் தன்மையையும் ஒருங்கே காண்கிறோம்:

'விலக்கலை, விடு விடு;
  விளித்து ளான்உரம்
கலக்கி, அக் கடல்கடைந்(து)
  அமுது கண்டென,
உலக்கஇன் னுயிர்குடித்(து)
  ஒல்லை மீள்குவன்,
மலைக்குல மயில்!' என,
  மடந்தை கூறுவாள்.

[விலக்கலை - விலக்காதே. விளித் துளான் - அழைத்துள்ளவன்; வலியப் போருக்கு அழைக்கும் சுக்கிரீவன். உரம் - மார்பு. கலக்கி - நிலைகலங்கச் செய்து. அக்கடல் - அந்தப் பாற்

கடல். கண்டென - கண்டதுபோல. உலக்க - (சுக்கிரீவன்) இறக்க. இன்னுயிர் - இனிய உயிர். ஒல்லை - விரைவில். மீள்குவன் - மீண்டு வருவேன். மலைக்குல மயில் - மலையிலுள்ள சிறந்த மயில் போன்றவளே. என - என்று (வாலி) சொல்ல. மடந்தை - பெண்; (இங்கே) மனைவியான தாரை.]

'அந்தக் கடலைக் கலக்கி கடைந்து அமுது கண்டேன், அந்த அமுதை நான் பருகவில்லை. ஆனால், இந்த வலுச்சண்டைக்காரனின் நெஞ்சு கலங்கக் கடைந்து இன்னுயிரைக் குடித்து வருவேன்!' என்று பேசும் கோபாவேசத்திலும் வாலி தாரையை 'மலைக்குல மயில்!' என்று விளிப்பது கவனிக்கத்தக்கது.

நெடுந்துணை உண்டு

தாரை பதில் சொல்லுகிறாள்: 'அப்படி வலிய வந்து அவன் போருக்கு அழைப்பதற்குக் காரணம் உண்டு' என்று. முன் இல்லாத வலிமையை இப்போது புதிதாகப் பெற்றுவிட்டானா? அல்லது புதிதாக ஒரு பிறவியே எடுத்து வந்து விட்டானா? இரண்டும் இல்லையே! எனினும் மீளவும் போர் செய்ய வந்திருக்கிறான். காரணம் இல்லாமல் காரியம் இருக்குமா? சுக்கிரீவனுக்கு மதிமயக்கமும் இல்லை, மத மயக்கமும் இல்லை; ஒரு பெரும் போர்த்துணை கிடைத்திருக்க வேண்டும்.

'பெற்றிலன், பிறந்திலன்;
 பெயர்த்தும் போர்செயற்(கு)
உற்றது நெடுந்துணை
 உடைமை யால்'என்றாள்.

[பெற்றிலன் — (புதிய சக்தியைப்) பெற்றானில்லை. பிறந்திலன் — (புதிதாகப்) பிறந்து வந்தானும் இல்லை. பெயர்த்தும் — மீளவும். போர் செயற்கு உற்றது — போர் செய்தற்கு வந்தது. நெடுந்துணை — பெரிய ஒரு துணைவன்.]

'சுக்கிரீவனுக்கு முன் இல்லாத ஒரு போர்த்துணை கிடைத்திருக்க வேண்டும். அதுவும் பெரும் போர்த் துணையாக இருக்கவேண்டும். அப்படியே தான் நடந்திருக்கிறது' என்று தாரை சொன்னதும், வாலி தான் புறப்படுகின்ற ஆத்திரத்தையும் ஒருவாறு மட்டுப்படுத்திக்கொண்டு, 'இவள் துயரத்தைப் போக்கவேண்டும்; இவளைச் சமாதானப் படுத்தவேண்டும்' என்று தீர்மானிக்கிறான்.

சிறிது சாவகாசமாகவே நின்று பதில் சொல்கிறான்.

கூற்றும்என் பெயர்சொலக்
 குலையு மால்!

[கூற்றும் — யமனும். சொல — சொல்ல. குலையும் — நிலை குலைந்து போவான். ஆல் — அசை.]

என்கிறான்.

மேலும் சொல்கிறான், மூடர்களே தன்னை எதிர்த்து வரத் துணிவார்கள் என்று. ஏனென்றால், எதிரே வந்து நிற்பவர்களுடைய தேக பல வரபலங்களில் பாதி வாலியை வந்தடையுமல்லவா?

'பேதையர்; எதிர்குவர்
 எனினும், பெற்றுடை
ஊதிய வரங்களும்
 உரமும் உள்ளதில்
பாதியும் என்னதால்,
 பகைப்ப தெங்ஙனம்?
நீதுயர் ஒழிகெ'ன
 நின்று கூறுவான்.

[பேதையர்-பேதைமை யுள்ளவர்கள்; அறிவில்லாதவர்கள். எதிர்குவர் எனின் — எதிர்ப்பரேயானாலும். பெற்றுடை — அவர்கள் பெற்றுள்ள. ஊதிய வரங்கள் - ஊதியமான வரங்கள்; லாபகரமான வர பலங்கள். உரம் - தேகபலம். ஒழிக என - ஒழிவாயாக என்று.]

வாலியின் இந்தச் சிறந்த வரபலங்களும் தேக பலங்களும் தாரை அறியாதவளா? வாலி சொன்ன 'பேதைய'ரில் இவளைச் சேர்க்க முடியாது. இவள் சொன்ன அந்த நெடும்போர்த் துணைவனும் 'பேதையரு'ள் ஒருவனாக வந்து எதிர்க்கக் கூடியவனா?

சித்திர ராமாயணம்

வாலி காவியம்

பி. ஸ்ரீ

328. சூரியனா.... காலாக்கினியா ?

'ராமன் சுக்கிரீவனுக்கு உயிர்த் துணைவனாகி அவனுடன் வந்திருக்கிறான். வேடிக்கை பார்க்கவா? உன்னைக் கொல்ல!' என்றாள் தாரை. வாலிக்கே தெரிந்திராத செய்தி. அம்மாள் எப்படித் தெரிந்து கொண்டாள்? 'பொருந்திய அன்பையுடையவர்கள் சொன்னார்கள்' என்று மிகவும் சுருக்கமாய்த் தெரிவித்தாள்.

மனைவியை அறிந்துகொள்ளாத கணவன்

இந்த அன்பினர்கள், அனுகூலர்கள் யார்? உளவறிந்து சொல்லக் கூடிய அறிவாளிகளாக இருக்கவேண்டுமல்லவா? இதனால் தாரையின் அறிவுத் திறனும் ஆலோசனைத் திறனும் புலனாவதாக ஊகிக்கலாம். உளவாளிகள் மூலமாக அபாயம் அறிந்து, வருமுன் காப்பாக எச்சரிக்கை செய்த அறிவாளி ஸ்ரீமதி வாலி என்று கூட ஊகஞ் செய்யும் ரஸிகர்கள் உண்டு.



'இத்தகைய காரியங்களில் மனைவிக்கு என்ன தெரியும்?' என்று தான் வாலி நினைக்கிறான், — எத்தனையோ புருஷர்கள் இந்நாளிலும் எண்ணுகிற மாதிரி. 'செவ்வையாக விசாரித்துப் பார்ப்போம்' என்று கூட நினைக்கவில்லை.

'அடி பாவி! உன் பெண்மையால் நீ பிழை செய்துவிட்டாய்!' என்கிறான்:

'பிழைத்தனை, பாவி! உன்
பெண்மையால்' என்றான்.

[பிழைத்தனை — பிழை செய்து விட்டாய்.]

ஏன்? உலகத்திற்குத் தர்ம வழி காட்டுகிறவன் ராமன் என்று தான் வாலி கேள்வியுற்றிருக்கிறான். அத்தகைய புருஷோத்தமன் விஷயத்தில் தாரை அபசாரப்படுவதாக வாலி நம்புகிறான்.

ராமனைத்தான் அறிந்திருந்தானா ?

'சுக்கிரீவனுடன் சேர்ந்து கொண்டு என்னைக்கொல்வது ராமனுக்குப் பெருமையோ? அப்படிச் செய்வதால் ராமன் அடையும் லாபம் தான் என்ன?' என்று கேட்கிறான். இதற்கும் மேலாக,

தருமமே தவிர்க்குமோ
தன்னைத் தானரோ?

[அரோ – அசை.]

—அதாவது, 'தருமம் தன்னைத்தானே ஒழித்து விடுமோ? தர்மம் தற்கொலை செய்து கொள்ளுமோ?' என்று புதிர் போடுவதுபோல் கேள்வி போடுகிறான்.

'இரு சகோதரர் ஒருவரோடு ஒருவர் போர் செய்யும்போது, மூன்றாமவன் குறுக்கிட்டு ஒருவனுக்கு உதவியாகி ஒருவனைக் கொல்வது அதர்மம்' என்கிறான் வாலி.

தசரத சக்ரவர்த்தி ஒரு மகாராஜ்யத்தைக் கொடுக்க, மூத்த மகனாகிய ராமன் அதை உரிமையாகப் பெற்றுக் கொள்ளும் போதும் துறவி போல் தியாக புத்தியுடன் பெற்றுக் கொண்டது நினைவிற்கு வருகிறது. தந்தை ஏவப் பெற்றுக் கொண்ட ராஜ்யத்தை, மாற்றாந் தாய் (தாயின் சக்களத்தி) ஏவ அவள் மகனுக்கே பரம சந்தோஷமாய் ராமன் கொடுத்து விட்டதும் ஞாபகத்திற்கு வருகிறது.

'அப்பேர்ப்பட்ட ஐயனைப் போற்றாமல் அவன்மீது பழி சுமத்தப் புகுந்



தாயே!' என்று சொல்லத் தோன்றுகிறது தாரையை நோக்கி வாலிக்கு :

ஏற்றபே ருலகெலாம்
எய்தி, ஈன்றவள்—
மாற்றவள் ஏவ,மற்(று)
அவள்தன் மைந்தனுக்(கு)
ஆற்றரும் உவகையால்
அளித்த ஐயனைப்
போற்றலை, இன்னன
புகறற் பாலையோ ?

[ஏற்ற—(தந்தை) ஏற்று ஆண்டுவந்த. பேருலகெலாம் – பெரிய உலகம் எல்லாம் ; மகாராஜ்யம் முழுவதையும். எய்தி – (உரிமையாகக்) கிடைக்கப் பெற்று. ஈன்றவள் மாற்றவள் - மாற்றாந்தாய் ; ஈன்றவளாகிய கௌசலையின் சக்களத்தியான கைகேயி. ஆற்றரும் உவகையால் – கொள்வதற்கு அரிய மகிழ்ச்சியுடன். போற்றலை – போற்றாமல். இன்னன - இத்தன்மையுள்ள சொற்களை. புகறற்பாலையோ - நீ சொல்லத் தகுதியுள்ளவளா.]

ராமனைத் தியாகமூர்த்தியென்றும் தர்மமூர்த்தி யென்றும் கேள்வியுற்றிருந்தவன் மகா வீரமூர்த்தி யென்றும் தெரிந்துகொண்டிருக்கிறான் :

நின்றபே ருலகெலாம்
நெருக்கி நேரினும்,
வென்றிவெஞ் சிலையலால்
பிறிது வேண்டுமோ ?

[நின்ற – நிலைபெற்ற. பேருலகு எலாம் – பெரிய உலகம் முழுவதும். நெருக்கி நேரினும் – திரண்டு எதிர்த்தாலும். வென்றி – வெற்றி. வெஞ்சிலை – கொடிய கோதண்டம். அலால் – அல்லாமல். பிறிது – வேறொரு உதவியும்.]

இப்படியெல்லாம் ராமனைத் தியாக மூர்த்தியாகவும் தர்ம மூர்த்தியாகவும் வீர மூர்த்தியாகவும் தெரிந்து கொண்டிருந்தும், வாலி ராமனைத் தெரிந்து கொள்ளவில்லை !

'அற்ப வானர ஜாதியுடன் சூரிய குல ராமனுக்கு நட்பும் ஏற்படக் கூடுமோ?' என்ற இந்தக் கேள்வியே போதும், ராமனை வாலி உள்ளபடி அறிந்து கொள்ளவில்லை யென்பதற்கு. வேடனாகிய குகனைப்போல் வானரனாகிய சுக்கிரீவனையும் நண்பனுக்கிச் சகோதரனுக்கிக் கொள்ளும் குணதிசயத்தை அறிந்திருந்தால் அல்லவா ராமனை அறிந்துகொள்ள முடியும்?

"எனினும் 'மகா குணசாலி' 'தயா சமுத்திரம்' என்றெல்லாம் ராமனைக் குறிப்பிட்டே தாரையை வாயடைக்கச் செய்கிறான் வாலி:

தம்பியர் அல்லது
 தனக்கு வே(று)உயிர்
இம்பரின் இலதென
 எண்ணி ஏய்ந்தவன்,
எம்பியும் யானும்உற்(று)
 எதிர்ந்த போரிடை
அம்பிடை தொடுக்குமோ
 அருளின் ஆழியான்?

[அல்லது - அல்லாமல். இம்பரின் - இவ்வுலகத்தில். இலது என - இல்லை என்று. ஏய்ந்தவன் - இசைந்துகொண்



டவன்; இணங்கிப் போனவன். எம்பி - என் தம்பியான சுக்கிரீவன். உற்று எதிர்ந்த போரிடை - பொருந்தி எதிர்த்துச் செய்யும் போரில்; தொந்த யுத்தம் செய்ய எதிர்த்து நிற்கும் போரிலே. அம்பு இடை தொடுக்குமோ - இடையே குறுக்கிட்டு அம்பு தொடுப்பானோ. அருளின் ஆழியான் - அருளின் சமுத்திரமாகிய ராமன்.]

ராமன் தம்பியரையே உயிராகக் கொண்டு இணங்கி நடப்பவனாகையால், தம்பியும் தானும் செய்யும் தொந்த யுத்தத்தில் குறுக்கிடமாட்டான் என்கிறான் வாலி. உண்மையில், ராமன் தம்பியல்லது தனக்கு வேறு உயிரில்லை என்று நடப்பவனாதலால் தம்பியை ஹிம்ஸித்து அவனுடைய தாரத்தையும் அபகரித்துக் கொண்ட வாலியை மன்னிக்க முடியுமா? இக் கருத்தைக் கவிக் கூற்றாக ஏற்கெனவே அறிந்திருக்கிறோம்.

ஒரு தம்பிக்கு ராஜ்யம் கொடுத்தான். ஒரு தம்பியை உடன் அழைத்து வந்து பணி செய்யும் பாக்கியத்தை — கைங்கரிய ஸாம்ராஜ்யத்தை — கொடுத்தான்.



ரயில் பிரயாணி :—“ இந்த ரொட்டி எல்லாம் புதுசு தானே அய்யா?”

ரொட்டி விற்பவன் :—“ எனக்குத் தெரியாதுங்க. நான் இந்த வேலைக்கு வந்து இரண்டு வாரம் தான் ஆச்சு !”

காட்டில் பிரவேசிக்கும் போதே தான் சுவீகரித்துக் கொண்ட வேடத் தம்பிக்குத் தன்னையே கொடுத்தான். இத்தகைய தயா சமுத்திரம் வேறொரு சுவீகாரத் தம்பியான சுக்கிரீவனுக்கும் பேருதவி செய்யக்கூடும் என்பதை வாலி உணர்ந்துகொள்ள வில்லை.

'கலங்காதே' என்று கலங்கச் செய்கிறான்

வாலி மறைத்துச் சொல்லித் தாரையிடம், 'மனம் கலங்காதே' என்கிறான். எனினும் தாரை கலங்கி விடுகிறாள். இப்போது தான் கலங்கி நிற்கிறாள். இருவரையும் இந்தச் 'சேர்த்தி' நிலையில் நாமும் இறுதியாக ஒரு நோக்கு நோக்குவோம். இவள்தான் இனி வாலியை உயிருடன் சந்திக்கப் போவதில்லையே!

'இருத்திநீ இறை இவண்;
இமைப்பில் காலையில்
உருத்தவன் உயிர்குடித்(து),
உடன்வந் தாரையும்
கருத்தழித்(து) எய்துவென்;
கலங்கல்' என்றனன்;
விரைக்குழல் பின்உரை
விளம்ப அஞ்சினள்.

[இருத்தி — இருப்பாய். இறை — சிறிது பொழுது. இவண் — இங்கே. இமைப்பில் காலையில் — கண்ணிமைப் பொழுதும் இல்லாத காலத்தில்; வெகு வெகு சீக்கிரமாகவே. உருத்தவன் — கோபித்து வந்த சுக்கிரீவன். கலங்கல் — கலக்கம் அடையாதே. விரைக் குழல் — வாசனையுள்ள கூந்தலை உடையவளான தாரை. உரை விளம்ப — (இதற்குப்) பதில் சொல்ல.]

தாரை சொன்னபடி சுக்கிரீவனுடன் ராமன் வந்திருக்கிறான் என்பதை வாலி நம்பாத போதிலும், வேறு யாரோ போர்த் துணைவர் கிடைத்துத் தான் தம்பி இவ்வளவு சூரத்தனமாக வலுச் சண்டைக்கு வந்திருப்பதாய் ஊகித்திருக்க வேண்டும். அல்லது, அனுமனும்

அவன் தூண்டுதலால் வேறு சில வானர வீரரும் சுக்கிரீவனுடன் ஒருவேளை துணிந்து வந்திருக்கவும் கூடும் என்று கூட வாலி கருதியிருக்கலாம்.

வீர சூரியோதயம்

தாரையை அப்படியே விட்டு விட்டுப் போர் வெறிகொண்டு தோள்கள் பூரிக்க வாலி கிஷ்கிந்த மலையின் ஒரு புறத்தே வருகிறான். சுக்கிரீவன் முதலானவர்கள் மேற்குப் புறமாக நிற்கிறார்கள். வாலி கிழக்குப் புறத்தில் வந்து தோன்றுகிறான், யுத்த உர்ஸாகத்துடன், வீர ஒளி பொங்கும் முகத்துடன், —'அதோ வீர சூரியோதயம் ஆகிவிட்டது!' என்று சொல்லும்படி.

குன்றினிடையே வந்து தோன்றிய வாலி உக்கிர நரசிங்கமூர்த்தி போலவும் விரைவில் காட்சி யளித்து ஆரவாரம் செய்யத் தொடங்குகிறான். ராமனும் அதிசயமாய்ப் பார்க்கிறான் இந்த வாலியின் வீர ஆவேசத் தோற்றத்தை. பார்த்து, லட்சுமணனுக்கும் அதிசயமாய்க் காட்டுகிறான் :

'எவ்வேலை, எம்மேரு, எக்காலொ(டு),
எக்கால வெந்தீ,
வெவ்வே(று) உலகத்(து) இவன்மேனியை
மானும்?' என்றான்.

[எவ்வேலை - எந்தக் கடல். எம்மேரு - எந்த மலை. எக்காலொடு - எந்தக் காற்றுடன். எக்கால வெந்தீ - எந்தக் கொடிய காலாக்கினி. வெவ்வேறு உலகத்து - உலகத்தில் தனித் தனியே. மானும் - ஒக்கும்.]

யாரோ வந்து நிற்பதாகவா தோன்றுகிறது இப்போது? 'எந்தக் கடலை, எந்த மலையை, எந்தக் கடுங் காற்றுடன் கூடிய காலாக்கினியைத்தான் ஒப்பிட முடியும் இந்தத் தோற்றத்திற்கு?' என்றுதான் ராமனும் கருதுகிறான்.

நெப்போலியனைப் போர் முனையில் கண்டதும் ஒரு வீரனைக் கண்டதாகத் தோன்ற வில்லையாம். நாற்பதாயிரம் படை வீரர் அங்கு ஒருங்கே திரண்டது போல ஓர் அதிசய உணர்ச்சி — ஒரு பிரமை—ஏற்பட்டதாம் எதிரிகளுக்கு. அத்தகைய பிரமிப்பு வாலியைக் கண்ட ராமனுக்கே ஏற்பட்டதாகக் கூறி நம்மைப் பிரமிக்க வைக்கிறான் கவிஞன்.

சக்தியுள்ள பாஷை

இக் கருத்துக்களை வெளியிடும் கவிஞனின் பாஷையைத்தான் பாருங்கள். இந்த ஜீவனுள்ள, சக்தி மயமான பாஷையும் நம்மைப் பிரமிக்கச் செய்கிறது—வாலியின் தோற்றம் பிரமிக்கச் செய்வது போல.

ஆடம்பரமான — பாண்டித்ய படாடோபம் வாய்ந்த செயற்கை பாஷை அல்ல. அபூர்வ ஜீவசக்தி அபூர்வ எளிமையோடு புலனாகிறது. அக்காலத்து மக்களின் பேச்சு வழக்கோடு இசைந்த பாஷையில் தான் இக் கவிஞனின் சிருஷ்டி சக்தி வெளிப்பட்டிருக்கிறது. எனினும் இது இறந்த காலத்துப் பாஷை யல்ல; மகா கவிகளின் சிரஞ்சீவி — பாஷைதான்.

இத்தகைய பாஷையைக் கருவியாகக் கொண்டு இக் கவிஞனுடைய சிருஷ்டி சக்தி படைப்புக் கடவுளின் சிருஷ்டி சக்தியைப் பிரதிபலித்துக் காட்டுவது மட்டுமா?

அயன் படைப்பினையும் - திருத்தி
அழகு செய்திடுவோன்

என்று தற்காலக் கவிமணி கூறுவது போன்ற அற்புதத்தையும் செய்து விடுகிறான்.

*   *   *

சூரியனா, நரசிங்கமா, கடலா, மலையா, காலாக்கினியா? இவை யெல்லாம் ஒருங்கே திரண்டு வந்து விட்டனவா? இல்லை, இல்லை. வாலியும் வாலும் தான்! இனி நடக்கப் போகும் குத்துச் சண்டைக்கு எத்தகைய வசீகரப் பிரவேசம்!





தென்னாட்டுச் செல்வங்கள்

93

சில கயிலைக் காட்சிகள்

(கைலாஸநாதர் கோயில்)

யானைச் சண்டை

மதம் பிடித்த அசுரன் அவன். சைவம் வைஷ்ணவம் இஸ்லாம் முதலியவற்றில் எந்த மதமும் பிடிக்கவில்லை தான்! சிவ மதம் – சிவபக்தி– சிறிதும் பிடிக்கவில்லை. சிவபெருமானையே வந்து தாக்கிவிட்டான் மதயானை உருவில். ஆனால் அந்தத் தாக்குதலை நாம் பார்ப்பதற்குள்ளே மத யானையின் மத்தகத்தின் மேல் காலை வைத்துக் கொண்டு வெற்றி முழங்க வீரக் காட்சியளிக்கிறார் கஜஹர மூர்த்தியாகக் கைலாஸநாதர்.

அசுரனைக் கண்டு அஞ்சாத பார்வதி தேவியும் இந்த வெற்றிக் கோலம் கண்டு பயந்தது போல், 'போதும், போதுமையா இந்தச் சொரூபம்; உம்முடைய அன்புச்சொரூபத்திற்கே வந்துவிடும்!' என்று பிரார்த்தித்த படியே பக்கத்தில் இருக்கிறாள்.

தாண்டவக் காட்சி

இந்த யானைச் சண்டை கண்டு, கஜஹர ரூபியின் பயங்கர சொரூபத்தையும் பார்த்துவிட்டு, இதே மலைச் சாரலில் கீத வாத்திய வினோதங்களுக்கிடையே தாண்டவமூர்த்தியின் அழகிய திருக்கோலத்தையும் தரிசிக்கப் பெறுகின்றோம்.

இப் பெருமான் காலடியில் மிதித்திருக்கும் ஆணவ சொரூபமான அசுரனின் தலையில் தேவி கையை வைத்து, வியந்து பார்த்துக் கொண்டிருக்கிறாள். அங்கே பயந்த உணர்ச்சி; இங்கே வியந்த உணர்ச்சி. நமக்கோ பத்துக் கைகளுடன் இந்த அழகுக் கோலமும் ஒரு பயபக்திக் காட்சிதான்.

சித்திர ராமாயணம்

வாலி காவியம்

பி. ஸ்ரீ

329 சொற்போரும் மற்போரும்

வாலியின் தோற்றம் அண்ணனை வசீகரித்ததுபோல் தம்பியை வசீகரிக்கவில்லை. ஏன்? அவன் அதிசயமாகச் சுட்டிக் காட்டினான்; இவனும் அந்தத் திசையில் பார்த்தான், அந்த வடிவைப் பார்த்தான். எனினும் அதிசயமாய்ப் பார்க்கவில்லை; அந்த மேனியின் மாண்பை மதித்துணர இயலாத நிலையிலா நிற்கிறான் லட்சுமணன்?

கலக்கமும் புழுக்கமும்

ஆம் காரணம் என்ன? அவ்வளவு மனக்கலக்கம் தம்பிக்கு. ஏன் இந்தக் கலக்கம்? 'என் மனக் கலக்கத்தால் நான் ஒன்றையும் உணர்ந்து கொள்ளவில்லை' என்கிறானே, ஏன் அப்படி? லட்சுமணனே சொல்லட்டும்.

'இந்தச் சுக்கிரீவன் தமையனைக் கொல்லும் யமனையல்லவா கொண்டு வந்திருக்கிறான்?' என்று எவ்வளவு ஆத்திரத்துடன் பேசுகிறான் தமையனை நோக்கி! 'அருமை அண்ணனை யமனுக்கிப் பேசுகிறோமே!' என்ற எண்ணமும் இல்லாமல் பேசுகிறான். இவ்வளவு மனக் கலக்கத்திற்கும், காரணம் சுக்கிரீவனின் செயல் — வாலியண்ணனைச் சுக்கிரீவத் தம்பி கொலை செய்யச் சூழ்ச்சி செய்திருக்கிறானே, அந்தச் செயல்.



இன்னும் மனம் பொறுக்காமல் புழுங்கிப் பேசுகிறான் தம்பி தமையனை நோக்கி. 'தர்மவழி தவறிக் காரியம் சாதிக்க முயல்வோரை நாம் நம்புவதும் நலமன்று!' என்கிறான். சுக்கிரீவன் தமையனையே கொல்ல முயல்வதால் அன்னியர் விஷயத்தில் எப்படி நம்பிக்கைக்கு உரியவன் ஆவான்? — இதுவும் லட்சுமணன் கேள்வி.

லட்சுமணன் உள்ளம்

லட்சுமணனுக்குத் தன் தமையன் மீதுள்ள ஒப்பற்ற பக்தியை, நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைப்பூட்டிக் கொள்ளவேண்டும். தமையனுக்காக எவ்வளவோ தியாகம் செய்தவன். தன் மனைவியைத் துறந்து தாயைத் துறந்து காட்டுக்கு வந்தவன். காட்டிலே தமையனுக்குப் பணி செய்து, அவசியமானால் தமையனுக்காகத் தன் உயிரையும் கொடுக்க வந்திருப்பவன். தமையனுக்காகத் தந்தையையும் தூஷித்தவன். கைகேயியை மட்டுமல்ல, பாதனையும் வெறுத்தவன். தமையனுக்காக அவர்களை வதைக்கவும் துணிந்ததாகப் பயமுறுத்தியவன். பிறகு

பரதனுடைய பெருமையையும் உள்ள வாறு உணர்ந்து கொண்டான். இத் தகைய சகோதரன், 'தமையனைக் கொல்லச் சூழ்ச்சி செய்கிறனே' என்று சுக்கிரீவனை வெறுத்துரைப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை.

இதுவா சமாதானம் ?

இனி, ராமன் சொல்லும் சமா தானத்தைக் கேட்கலாம் :

எத்தாயர் வயிற்றினும் பின்பிறந்-
தார்கள் எல்லாம்
ஒத்தால், பரதன்பெரி(து)உத்தமன்
ஆதல் உண்டோ?

[எத்தாயர் வயிற்றினும் - எல்லாத் தாய்மார் வயிற்றிலும். பின்பிறந்தார்கள் எல்லாம் — பிறந்த தம்பிமார்கள் எல்லாரும். ஒத்தால் — (தமையன்மாருக்கு அன்புடைமையில்) ஒத்தவர்களாயிருந்தால். பெரிது - பெரிதும்.]

'அப்பா லட்சுமணு, தம்பிமாரெல்லாம் உன்னைப்போல் இருந்துவிட்டால் உன்னை உத்தம சகோதரனாக மதிப்பவர் உண்டோ?' என்று கூடச் சொல்லவில்லை.

தமையன்மீது பகைமை கொண்டு அவனைக் கொல்லத் துணிந்த சுக்கிரீவனை லட்சு



மணன் குறை கூறியதும் ராமனுக்கு உடனே பரதனின் நினைவுதான் மேலிடு கிறது. இதனால் லட்சுமணனைத் தாழ்த் திக் கூறியதாகாது.

லட்சுமணனும் பரதனுமாகிய இரண்டு சகோதரர்களையும் இரண்டு கண்களாகக் கொண்டு ராமன் நேசிக்கி ருன் என்பதில் சந்தேகம் இல்லை. இக் கண்களில் 'எது வலது கண், எது இடது கண்?' என்று வேற்றுமை காண முயல்வதும் வீண் முயற்சிதான்.

லட்சுமணனைப் பிரிந்து வருந்திய நிலையில் பரதனைக் காட்டிலும் சற்று அதிகமான அன்பை லட்சுமணன் விஷயமாக ராமன் வெளியிடுவது போலவும் தோன்றுகிறது.

என்றாலும், காட்டிலும் தன்னைப் பிரியாது தியாகப் பணிபுரியும் இந்தத் தம்பியிடம், தன்னைப் பிரிந்து நாட்டிலே தவங்கிடக்கும் அந்தத் தம்பியின் பெரு மையை உணர்த்துவது போலவே அமைந்திருக்கிறது, ஏற்கெனவே உணர் ந்திருப்பவனுக்கு மேலும் உணர்த்து வது போலவும் வற்புறுத்துவது போல வும் இருக்கிறது, இச்செய்யுள். ஆனல் இதுவா சமாதானம்?

இந்த வாதம் தான் பொருந்துமா ?

இனி, இந்தப் பாட்டு முழுமையும் பார்க்கலாம் :

'அத்தா ! இது கேள்' என ஆரியன்
கூறு வான்: இப்
பித்தாய விலங்கின் ஒழுக்கினைப்
பேச லாமோ ?
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந்
தார்கள் எல்லாம்
ஒத்தால், பரதன்பெரி(து)உத்தமன்
ஆதல் உண்டோ !

[அத்தா - அப்பா. ஆரியன் — வணங் கத் தக்க தலைவன்; (இங்கே) ராமன். பித்து - பித்தம் ; (இங்கே) அறிவுத் தெளிவு இன்மை; பகுத்தறிவு இன்மை. ஆய - ஆகிய. விலங்கு - மிருகம். ஒழுக் கினை — ஒழுக்கத்தை.]

'பகுத்தறிவு இல்லாத மிருக ஜாதி களின் ஒழுக்க முறை குறித்து இப்படி ஆராய்ந்து பேசுவது பொருந்துமோ ?' என்று கேட்கிறுன் ராமன் லட்சுமணனை நோக்கி.

'அப்பா, நான் சொல்லப் போவ தைக் கூர்ந்து கவனி' என்ற பீடிகை யுடன் பேசுகிறுன்.

'வானர சகோதரரில் தமையனைப் பகைத்த சுக்கிரீவன் இருக்கட்டும்; பகுத்தறிவுள்ள மனித சகோதரர்களில் தம்பிமார்களெல்லாம் தமையன்மாரிடம் உத்தம அன்பினராக நடந்து கொண் டால் பரதனை உத்தம சகோதரன் என்று சிறப்பித்துப் பேசுவது எப்படி?' என்று பேசி முடிக்கிறுன்.

பகுத்தறிவுள்ள மனிதர்களின் ஒழுக் கம் குறித்துப் பேசும்போது, 'இது நியாயம், அது அநியாயம்' என்று பேசுவதுபோல், வானர வகுப்பினரான சுக்கிரீவன் முதலானவர்களின் நடத்தை குறித்துப் பேசுவது பொருந் தாது என்று ராமன் கருதி லட்சுமண னுக்குச் சமாதானம் சொல்வதுபோல் தோன்றுகிறது. ஆனல் இந்த வாதம் பொருந்துமா ?

இது பொருந்துமென்றால், வாலி சுக்கிரீவன் விஷயத்தில் அநியாயமாக நடந்து கொண்டானென்று ராமன் கோபாவேசமும் தர்மாவேசமும் கொண்டதற்குத்தான் என்ன நியாயம் இருக்க முடியும்?

மேலும், இந்த வாதம், தான் சகோ தரனுக்கிக் கொண்ட இந்தச் சுக்கிரீவத் தம்பிக்குத் தான் நீதி செலுத்துவதா குமா? 'பித்தாய விலங்கு' என்று புதிய தம்பியை (அவன் இல்லாத இடத் தில்) பழைய தம்பியிடம் இகழ்ந்து பேசுவதுதான் நியாயமா ?

குத்துச் சண்டை

சுக்கிரீவனது அக்கிரமத்தை எடுத்துக் கூறிய லட்சுமணனுக்கு ராமன், 'அதுவா? பித்தாய விலங்கின் முறை' என்றெல்லாம் ஏதேதோ சமாதானம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வாலி சுக்கிரீவர் போருக்கு நெருங்கி விட்டார்கள்.

அவர்கள் முட்டிக் கொள்ளும் அதிர்ச்சியிலே ராம லட்சுமணருக்கு இடையே நிகழும் வாதப்போரின் அதிர்ச்சியை அப்படியே விட்டு விடுவோம்.

இந்தச் சகோதரர்கள் பேச்சில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தச் சகோதரர்களோ சண்டையில் ஈடுபடுகிறார்கள்:

மூரித் திசையானை இரண்டெனமுட்டி னரே.

[மூரி — வலிமை. திசை யானை — திக்கஜங்கள்.]

மிருகங்கள் போல், பைத்தியங் கொண்ட யானைகள் போல் முட்டிக் கொண்டார்கள் என்று இங்கே வருணிப்பது நியாயம்தான், பொருத்தம் தான். சண்டையே பொதுவாகப் 'பித்தாய விலங்கின் ஒழுக்கம்'தானே (The law of the jungle)?

வாலி சுக்கிரீவர் இருவரும் வலசாரி இடசாரி திரிகின்றார், கடுவிசையாக. இப்படிச் சாரி திரிந்தவர்கள் மனக் கொதிப்புடன் மிகவும் நெருங்கித் தோளோடு தோள் தேய்ப்பதும், காலோடு கால் எற்றுவதுமாகப் போர் புரிகிறார்கள்.

'சிற்றம் என்பது உடல் கொண்டு இரண்டாகி' ஒன்றோடொன்று கடும் போர் செய்வது போலத் தோன்றுகிறதாம்.

ஓடி யோடிப் போர் புரிகின்றார்; எழும்பிக் குதிக்கின்றார். இந்தப் போர்வேகத்திலே, வெகு விசையாகச் சுழன்று திரியும் சுழற்சிகளிலே, 'அதோ அவர்கள் மண்மேல் உள்ளாரோ? விண்மேல் உள்ளாரோ? அல்லது கண்மேல் உள்ளாரோ?' என்றெல்லாம் காண்போருக்கும் கண் கலக்கமும் மனக்கலக்கமும் ஏற்படுகின்றனவாம்.

ஒருவரையொருவர் குத்தும் ஓசையே இடிபோல் காதில் விழுகிறதாம் கேட்பவர்களுக்கு:

பாழித்தடந் தோளினும்மார்பினும்
கைகள் பாய,
ஊழிக்கிளர் காரிடி ஒத்தது
குத்தும் ஓசை!

[பாழித் தடந்தோளினும் — வலிமையுள்ள பெரிய தோள்களிலும். மார்பினும் — மார்பிலும். ஊழிக் கிளர் கார்இடி — ஊழிக் காலத்தில் எழுகின்ற கருமேகங்களின் இடி முழக்கம்.]

சண்டை உக்கிரமாகிறது

திடீரென்று இரும்பைச் சம்மட்டி கொண்டு அடிப்பதுபோல் ஓசை கேட்கிறது. கொல்லன் உலைக்களத்திலே பழுக்கக் காய்ந்த இரும்பின்மேல் பெரிய பெரிய சம்மட்டிகள் விழுந்து அடிக்குமே அனற்பொறிகள் தெறிக்கும்படி, — எங்கும் சிந்திச் சிதறும்படி, — அந்த மாதிரி ஓசைகள் காதில் விழுகின்றன.

உலைக்களமல்ல, போர்க்களம் தான். வாலியின் தோள்களில் சுக்கிரீவனின் கைகளும், சுக்கிரீவனின் மார்பிலே வாலியின் முரட்டுக் கைகளும் மோதி அடிக்கும் அடிகள் தான்!

வாலி தோள்களும் தகர்வதுபோலத் தோன்றுகிறது. சுக்கிரீவனின் மார்பும் தகர்ந்துபோவது போலக் காண்கிறது.

ஒருவருக்கொருவர் தோற்றுப் போகாமல் சரிநிகர் சமானமாகப் போர் புரிகின்றார் வானர சகோதரர்கள். அந்தச் சகோதரர்கள் தங்கள் வாதப் போரை முடித்துக்கொண்டு இந்தக் குத்துச் சண்டையை வைத்த கண் வாங்காமல் கவனிக்கிறார்கள் என்று கருதலாம்.

சித்திர ராமாயணம்



330. தோற்றவனுக்கு மாலை !

குத்துச் சண்டை நெடும்போது நடக்கிறது.

ஒருவரை யொருவர் மார்பினால் நெட்டித் தள்ளினார்கள். கைகளால் விசையாகக் 'குத்து' விட்டார்கள். கால்களால் உதைத்துக் கொண்டார்கள். பல்லால் கடித்துக் கொண்டார்கள். நேர் நின்று முட்டி இடித்து மோதினார்கள்.

போர் வெறி — இந்த வானரர்களை மட்டுமா, வாலிழந்த நரர்களையும் கூட — மிருகமாக்கி விடுகிறது! ஆம், 'பித்தாய விலங்கின் ஒழுக்கமே' போர் வெறியர்களின் ஒழுக்கமாகி விடுகிறது!

வரம்பு மீறிய போர்


இன்னும் பாருங்கள். மரம், மட்டைகளைக் கொண்டு அடித்துக் கொள்கிறார்கள். மலையிலிருந்து 'மலைப் பிஞ்சு'களைப் பெயர்த்தெடுத்து மண்டை மேல் 'அர்ச்சனை' செய்கிறார்கள்.

அதட்டுகிறார்கள்; ஆரவாரஞ் செய்கிறார்கள். உறக்குகிறார்கள் ஒருவரை யொருவர், கண்களில் தீப்பொறி பறக்க.

அந்தத் 'தீ விழிப்பை'யும், உதைகளையும், அடிகளையும் இதோ பாருங்கள் இந்தச் செய்யுள் வாயிலாக :

உரத்தினால் மடுத்(து) உந்துவர் ;
பாதம்இட்(டு) உதைப்பர் ;
கரத்தினால்விசைத்(து) எற்றுவர் ;
கடிப்பர் ; நின்(று) இடிப்பர் ;
மரத்தினால்அடித்(து), உரப்புவர் ;
பொருப்பினம் வாங்கிச்
சிரத்தின் மேல்எறிந்(து), உறுக்குவர் ;
தெழிப்பர் ; தீ விழிப்பர்.

[உரத்தினால் - மார்பினால். மடுத்து உந்துவர் - நெட்டித் தள்ளுவர். கரத்தினால் - கைகளால். விசைத்து எற்றுவர் - விசையாகக் குத்திக் கொள்வார்கள். உரப்புவர் - அதட்டுவார்கள். பொருப்பு இனம் வாங்கி — மலைவர்க்கத்திலிருந்து 'மலைப் பிஞ்சு'களான கற்களைப் பெயர்த்தெடுத்து. உறுக்குவர் - பயமுறுத்துவார்கள். தெழிப்பர் - ஆரவாரஞ் செய்வார்கள். தீவிழிப்பர் - தீப்பொறி பறக்கக் கோப விழி விழிப்பர்.]



குத்துச் சண்டையாகவே கொடுமை!

என்ன? இப்போது குத்துச் சண்டை குத்துச் சண்டையாகவே நடைபெறுகிறதா, —ஏதோ

ஒரு வாம்பிற்கு உட்பட்டு நடப்பது போல? பாருங்கள்:

எடுப்பர் பற்றிஉற்(று); ஒருவரை
　ஒருவர்விட் டெறிவர்;
கொடுப்பர் வந்(து)உரம்; குத்து
　கைத்தலம் குளிப்பக்; [வர்
கடுப்பி னில்பெருங் கறங்கெனச்
　சாரிகை பிறங்கத்
தடுப்பர்; பின்றுவர்; ஒன்றுவர்;
　தழுவுவர்; விழுவர்.

[உற்றுப் பற்றி எடுப்பர் – (ஒருவரை யொருவர்) நெருக்கிப் பிடித்துத் தூக்கு வார்கள். விட்டு எறிவர் – வீசி யெறி வார்கள். வந்து உரம் கொடுப்பர் – (விழுந்தவர் ஓடி) வந்து (எதிரிக்கு) மார்பைக் காட்டுவர். கைத்தலம் குளிப்ப – கைமுஷ்டி புதையும்படி. கடுப்பினில் – விசையாக; வெகு வேக மாய். கறங்கென – காற்றாடிபோல. சாரிகை - வலசாரி இடசாரி முறை கள். பிறங்க – விளங்க. பின்றுவர் – பின்வாங்குவார்கள், விசையோடு வந்து தாக்குவதற்காக. ஒன்றுவர், தழுவுவர், விழுவர் – வந்து பொருந் தித் தழுவி இருவரும் கீழே விழு வார்கள்.]

கையால் புடைத்தும், காலால் உதைத்தும் சண்டை போட்டவர்கள் இப்போது வால் படைத்த பாக்கி யத்தை இச் சண்டையிலும் பயன் படுத் திக் கொள்கிறார்கள்:

வாலி னால்உரம் வரிந்தனர்,
　நெரிந்(து)உக வலிப்பர்;
காலி னால்நெடுங் கால்பிடித்(து)
　உடற்றுவர்; கழல்வர்;
வேலி னால்அற எறிந்தென,
　விறல்வலி உகிரால்,
தோலி னால்உடல் நெடுவரை
　முழையெனத் தொளைப்பர்.

[வாலினால் உரம் வரிந்தனர் – ஒரு வரை ஒருவர் வாலால் கட்டினவர்க ளாய். நெரிந்து உக — நெரிந்து பொடி யாகும்படி. வலிப்பர் — இழுப்பார்கள். நெடுங்கால் பிடித்து — நீண்ட காலைப் பிடித்து. உடற்றுவர் — வருந்தச் செய் வார்கள்; ஹிம்ஸிப்பார்கள். கழல்வர் — பிடியைச் சிறிது நெகிழ்த்திக் காலைக் கழற்றிக் கொள்வார்கள். அற எறிந் தென — நன்றாக எறிந்தாற் போல. விறல் வலி உகிரால் — மிக்க வலிமை வாய்ந்த நகங்களால். தோலினால் உடல் — தோலுடன் உடம்பு. நெடுவரை முழையென — பெரிய மலையின் குகை போல் ஆகும்படி. தொளைப்பர் – துளைப் பார்கள்.]

யானையும் யானையும்தானா?

ஒருவருக்கொருவர் தோற்காமல் சமமாகப் போர் செய்கிறார்கள். வெற்றி தோல்வி யில்லாமல் இச் சண்டை இப் படி நீடித்ததே அதிசயம் தான்.

'கடல் கடைந்த வெங்காதலங்களால் — உடல் கடைந்தனன், இவன் உலைக் தனன்' என்று அனுமன் ஏற்கெனவே சுருங்கச் சொல்லி விளங்க வைத்தபடி அவ்வளவு அநாயாசமாக, அவ்வளவு விரைவாக வெற்றிபெறக்கூடிய வீரதீர வாலியுடன் சுக்கிரீவன் இப்படி நின்று விளையாடிய அதிசயத்திற்குக் காரணம் தான் என்ன?

ராமனைத் துணையாகக் கொண்டிருக் கும் பலம்தான். வாலியின் தேக பலம் என்ன? — வர பலம் என்ன? தன்னை எதிர்ப்படும் எந்த எதிரியின் பலத்திலும் —தேக பலத்தில் மட்டுமல்ல, வரபலத் திலும் கூட — ஒரு பாதியை ஆகர்ஷித் துக் கொள்ளும் மாய வாலியுடன் நேர் நின்று முட்டி, அந்த மார்புடனும் அஞ்சாது ஒட்டிக் குத்துச்சண்டை போட்டானே சுக்கிரீவன், இது எப்படி?

ராமன் மீதுள்ள நம்பிக்கையின் ஓர் அற்புதமாகத் தோன்றிய மனோபலம் தான் வாலியின் தேக பலத்தையும் வா பலத்தையும் ஒருங்கே சமாளிக்க உதவி யது. சமமான பலமுள்ள யானைகள் முட்டிக் கொண்டது போல, இவர்கள் இதுவரை சண்டை போட்டதற்கு இது காரணமாக இருந்திருக்கலாம்.



பக்தி மறைந்து பயம்

எதிர்பார்த்த உதவி இன்னும் வந்து சேரவில்லை. நம்பிக்கை-மந்திரம் சக்தி இழக்கத் தொடங்குகிறது. வாலியின் வரபலம் சுக்கிரீவ சக்தியில் ஒரு பாதியை உறிஞ்சி விடுகிறது.

கூர்மையான நகங்களோடு கூடிய வாலியின் கைமுஷ்டி இப்போது குத்தும் குத்துக்களைச் சுக்கிரீவனால் தாங்க முடியவில்லை.

'கடல் கடைந்த வெங்கரதலங்களால் —உடல் கடைந்தனன், இவன் உலைந்தனன்' என்ற அதே முடிவுதான் இப்போதும். கடல் கடைந்த அந்த வலிமையெல்லாம் வாலியின் வலிய பெரிய நீண்ட திரண்ட தோள்களில் ஒரு கடல் போல் பெருகித் தன்னை மூழ்கடித்து விடும் என்ற பெரும் பீதி வந்துவிடுகிறது சுக்கிரீவனுக்கு.

யானையும் சிங்கமும்

அப்படிச் சுக்கிரீவனைக் குத்திக் குமைத்து நிலைகுலையச் செய்யும் வாலியைப் பார்ப்போம்.

மூரித் திசையானை இரண்டென
முட்டி னாரே

என்று கவிஞன் வருணித்த சண்டை, இப்போது சம பலமுள்ள இரண்டு மத யானைகளின் சண்டையாக இல்லை; சிங்கத்திற்கும் யானைக்கும் சண்டையாகத் திடீரென்று மாறி விடுகிறது!

சிங்க வாலி சுக்கிரீவ யானையைப் படுத்தும் பாடு, ஐயோ! நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்:

அன்ன தன்மையர், ஆற்றலின்
அமர்புரி பொழுதின்,
வன்னெ டுந்தடந்திரள்புயத்(து)
அடுதிறல் வாலி,
சொன்ன தம்பியைத், தும்பியை
அரிதொலைத் தென்னக்,
கொல்ந கங்களின், கரங்களின்,
குலைந்துக மலைந்தான்.

[அன்ன தன்மையர் — அப்படிப்பட்ட தன்மையுடையவர்களாய். ஆற்றலின் — (சமமாகத் தோன்றிய) ஆற்றலுடன்; பல பராக்கிரமங்களுடன். அமர் புரி பொழுதின்—போர் புரிகின்ற பொழுது. வல் நெடுந் தடந்திரள் புயத்து - வலிய, நீண்ட, பெரிய, திரண்ட புஜங்களை யுடைய. அடு திறல் வாலி — அழிக்கும் திறமையுள்ள வாலி. தும்பி - யானை. அரி — சிங்கம். தொலைத்தென்ன — தொலைக்குமாறு போல. குலைந்து உக - நிலைகுலைந்து போகும்படி. மலைந்தான்— போர் செய்தான்.]

தோல்வியும் பரிசும்

போரின் இந்த நெருக்கடி நிலையில் நிலைகுலைந்த சுக்கிரீவனுக்கு உடல் நைந்து உள்ளமும் நைந்து போகிறது. ஜயசாலியாகிய வாலியிடமிருந்து தப்பி ஓடி ராமனிடம் போகிறான்.

சகோதரர் இருவரும் ஒருவரையொருவர் ஒத்திருந்ததால் ராமன் அம்பு போடவில்லை. அண்ணனைக் கொல்ல வேண்டிய அம்பு சுக்கிரீவனைத் தவறிக் கொன்று விடலாகாதே என்றுதான் சும்மா இருந்துவிட்டான். இனி என்ன நடக்கிறதென்று பார்க்கலாம்:

மலைந்த போதில்நைந்(து)
இரவிசேய்
ஐயன்மாட்(டு) அணுகி,
உலைந்த சிந்தையோ(டு)
உணங்கினன்,
வணங்கிட, 'உள்ளம்
குலைந்தி டேல்; உமை வேற்றுமை
தெரிந்திலம்; கொடிப்பூ
மிலைந்து செல்கெ'ன விடுத்தனன்;
எதிர்த்தனன் மீட்டும்.

[மலைந்த போதில்—(மேலே சொன்ன படி) போர் புரிந்தபோது. இரவிசேய்- சூரிய குமாரனான சுக்கிரீவன். ஐயன் மாட்டு அணுகி - ராமனிடம் வந்து சேர்ந்து. உணங்கினன் - வாட்டமுற்றவனாய். குலைந்திடேல் - குலைந்து போகாதே. உமை - உம்மை; உங்களை. வேற்றுமை தெரிந்திலம் — வித்தியாசம் தெரியாமல் இருந்துவிட்டோம். கொடிப்பூ — (இங்கே) பூங்கொடி. மிலைந்து செல்க என - சூடிச் செல்வாயாக என்று. மீட்டும் — மீளவும்.]

'அடையாளம் தெரிய இதை அணிந்து செல்' என்று ராமன், இயற்கையாக ஒரு கொடிப் பூமாலை போலக் காணப்பட்ட ஒரு காட்டுப் பூங்கொடியைச் சுக்கிரீவன் கழுத்தில் கட்டி அனுப்பி வைக்கிறான்.

வாலி காவியத்தின் அருமை பெருமைகளில் இந்தக் குத்துச்சண்டை வர்ணனையும் ஒரு விசேஷம்தான்.

* * *

தோற்ற சுக்கிரீவனுக்கு ராமன் அளிக்கும் அடையாளக் கொடிமாலை வெற்றிமாலையாகிறது. நிலை குலைந்த சுக்கிரீவன், நம்பிக்கையை அறவே குலையவிடாமல் ராமனிடம் போய்த் தன்னுடைய பக்தி விசுவாசத்திற்குப் புத்துயிர் ஊட்டிக்கொள்கிறான். இந்தப் புத்துயிருக்கும் புது நம்பிக்கைக்கும்— சுக்கிரீவனுடைய மேனிக்கு மட்டுமல்ல — ஓர் அழகான, வசீகர அடையாளம் ஆகிறது, அறிகுறியாகிறது, இப்பூங் கொடி மாலை.